பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 ஆடி 08 சனிக்கிழமை 24.07.2021 கதிர் 261

### இது ரகசியம் அல்ல!

மோசமடைந்து வரும் இலங்கையின் பொருளாதார நிலைமைகள் குறித்து சர்வதேச வர்த்தக அமைப்புகள் பல தமது வாடிக்கையாளர்களுக்கு எச்சரிக்கைகளை வெளியிட்டு அபாயச் சங்கு ஊதி வருகையில் அமெரிக்க வெளிவிவகார பக்கம்02

## கொரோனா சாவு 4000 +

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 4 ஆயிரத்தைத் தாண்டியுள்ளது.

கொரோனாத் தொற்றால் மேலும் 43 பேர் உயிரிழந்துள்ளனர் என்று அரசதகவல் திணைக்களம் நேற்றிரவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, நாட்டில் 2

## ஆடிக் கலவரத்துக்கும் சர்வதேச விசாரணை நடத்தக்கோரி வவுனியாவில் ஆர்ப்பாட்டம்

### கஜேந்திரகுமார் எம்.பி. தலைமையில்



இலங்கை அரசால் 1983 ஆம் ஆண்டு ஜூலை மாதம் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட திட்டமிட்ட இனப்படுகொலை நிகழ்வு நடைபெற்று 38 ஆண்டுகள் இம்மாதத்துடன் நிறைவுறுகின்றது. அந்தப் படுகொலைக்கும் அதற்கு முன்னரும் பின்னரும் இடம்பெற்ற படுகெலைகளுக்கும் தற்போதும் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் படுகொலைகளுக்கும் நீதி கோரும் போராட்டம் நேற்று 2



# தமிழே உச்சரிக்கத் தெரியாத ஒருவர் வடக்கின் பிரதம செயலர் பதவிக்கு!



## சுமந்திரன் எம்.பி. கடும் கண்டனம்

(ந.லோகதயாளன்)

வடக்கு மாகாணத்தின் ஆட்சி மொழியாக தமிழ் மொழி இருக்கும்போது தமிழே உச்சரிக்கத் தெரியாத ஒருவர் பிரதம செயலாளராக நியமிக்கப்பட்டமையை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். 2

## புலிக்குளம் வேலைத்திட்டம் ஆரம்பம்

கிளிநொச்சி அறிவியல்நகர் யாழ்.பல்கலைக்கழக வளாகத்துக்கு பின்புறமாக இருக்கும் புலிக் குளத்திலிருந்து பல்கலைக்கழக வளாகத்துக்கு வாய்க்கால் மூலம் நீரைக் கொண்டுவருவதற்கான வேலைத்திட்டம் நேற்று உத்தியோகபூர்வமாக ஆரம்பித்துவைக்கப்பட்டது.

யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சிறிசற்குணராஜா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், கிளிநொச்சி மாவட்ட பிரதி 2



## யாழில் 29 பேர் உட்பட வடக்கில் மேலும் 50 பேருக்குத் தொற்று

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 29 பேர் உட்பட வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த 50 பேருக்கு நேற்று கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று 770 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையிலேயே குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதன்படி யாழ். மாவட்டத்தில் 29 பேருக்கும், கிளிநொச்சி மாவட்டத்தில் ஒருவருக்கும், வவுனியா மாவட்டத்தில் 03 பேருக்கும், மன்னார் மாவட்டத்தில் 11 பேருக்கும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 05 பேருக்கும் 2

## ரிஷாத்தின் மைத்துனரும் தடுப்பில்

முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் வீட்டில் முன்பு பணியாற்றிய 22 வயதுடைய பெண்ணொருவரை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் கைதான 2

## ரிஷாத்தின் மனைவி உட்பட 3 பேர் இன்று வரை பொலிஸ் தடுப்பில்

ஹிஷாலினி என்ற 16 வயதான சிறுமி மரணித்தமை தொடர்பில் கைதான முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் மனைவி உள்ளிட்ட 3 பேர் இன்று வரை பொரளை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண இதனைத் தெரிவித்துள்ளார்

நேற்று கைதுசெய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் 2

## யாழில் கொரோனோவால் மேலும் ஒருவர் உயிரிழப்பு

(எஸ்.நிதர்ஷன், இ.கலையமுதன்)

யாழ்ப்பாணத்தில் மேலும் ஒருவர் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த 78 வயதுடைய ஆண் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இதுவரை 118 பேர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளனர்.

## கறுப்பு ஜூலை படுகொலை நினைவேந்தல்; நீதி கோரி யாழில் கவனயீர்ப்புப் போராட்டம்



(எஸ்.நிதர்ஷன், இ.கலையமுதன்)

ஈழத்தமிழர்கள் மீதான இலங்கை அரசின் இனப் படுகொலைக்கு நீதி வேண்டும் என வலியுறுத்தி யாழ். மத்திய பஸ் நிலையம் முன்பாக நேற்று கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

'கறுப்பு ஜூலை 23' 2

## 1,785 பேருக்கு நேற்று கொரோனா தொற்று

இலங்கையில் நேற்று 1,785 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 93 ஆயிரத்து 83 ஆக எகிறியுள்ளது.

அத்துடன், கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 953 பேர் நேற்று குணமடைந்து வீடு திரும்பினர்.

அதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 65 ஆயிரத்து 708 ஆக அதிகரித்துள்ளது என அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அமைச்சின் செய்திக் குறிப்பு ஒன்றும் அதை ஊர்ஜிதம் செய்திருக்கின்றது.

இலங்கையில் பரிவர்த்தனைச் செலவுகள் உச்சம். அந்த நிலைமையை அங்கு நிலவும் எதிர்வு கூற முடியாத பொருளாதாரக் கொள்கைகள் இன்னும் மோசமடைய வைத்துள்ளன. அரச சேவைகளோ செயற்றிறனற்றவையாகி விட்டன. சேவைகளைப் பெற்றுக் கொள்ளும் அரசின் நடைமுறைகளிலோ வெளிப்படைத் தன்மையே இல்லை.. இதனால் இலங்கையுடன் வர்த்தகம் செய்வது மிகச் சவாலான விடயமாக உள்ளது. திடீர் ஒப்பந்த மறுப்புகள், கூட்டு ஒழுங்குகளில் குழப்பம், அபகரிப்பு, முறையற்ற ஆதிக்கம் செலுத்துதல் போன்ற அத்துமீறல்கள் தொடர்பில் முதலீட்டாளர்கள் அதீத கவலைத் தெரிவிக்கின்றார்கள்.

இலங்கையில் செயல்படும் அமெரிக்க நிறுவனங்களுக்கும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கும் இலங்கையில் அரச பொதுச் சேவை நிறுவனங்களில் நீடிக்கும் ஊழல், மோசடிகள் பெரும் நெருக்குவாரத்தைத் தந்துள்ளன.

ஊழல், மோசடிகளை எதிர்கொள்வதற்கு போதிய சட்டங்கள், விதிகள் இலங்கையில் உள்ள போதிலும் அவற்றை நடைமுறைப்படுத்தும் முறைமை பெரும் பலவீனமாக உள்ளது. அதுவும் ஆளாளுக்கு மாறுபடுகின்றது. அதில் மாறா நிலையான தன்மை இல்லை. இலக்கு வைத்து சில தரப்புகளுக்கு எதிராக மட்டும் அவை பிரயோகிக்கப்படுகின்றன.

பெரும் உள்கட்டமைப்பு திட்டங்கள் சம்பந்தப்பட்ட அரச ஒப்பந்தங்களில் ஊழல், மோசடி நிறைந்து கிடக்கின்றன என அமெரிக்கப் பங்காளர்களும், சாத்தியமான முதலீட்டாளர்களும் விசேடமாக விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்த விடயங்கள், குறைபாடுகள் குறித்து கவனம் எடுப்பதாக இலங்கை அரசு கூறினாலும், கொவிட் தடுப்பே இங்கு பிரதான பிரச்சினையாகக் கையாளப்படுகின்றது.

சரித்திர ரீதியாக பிரதான அரசியல் கட்சிகள் அதிகாரத்தை இழக்கும் போது அல்லது பெறும்போது ஒருவருக்கு எதிரான ஊழல், மோசடி வழக்குகளை மற்றவர் தொடர்ந்து மேற்கொள்வதில்லை. இதுவே சரித்திரமாக உள்ளது.

– இப்படி அமெரிக்க வெளிவிவகார அமைச்சு தனது பிந்திய அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டிருக்கின்றது.

கொழும்புக்கு எதிராக அமெரிக்கா வகுக்கும் – வளைக்கும் – வியூகத்தின் ஓர் அங்கமாகத்தான் இது எனக்குத் தோன்றுகின்றது.

இலங்கை நிலைவரம் தொடர்பான உண்மையான மதிப்பிடு இது.

சர்வதேச முதலீடுகள், பங்காளர்களை கொழும்பு இழப்பதற்கான காரணங்கள் இதில் மேலோட்டமாக வரிகளுக்கு இடையில் புதைந்து கிடக்கின்றன.

ஆனால், இலங்கை ஊடகங்கள் ஏனோ இந்த அறிக்கைக்கு – அறிவிப்புக்கு – முக்கியத்துவம் கொடுக்கவில்லை. *'பூனை கண்ணை மூடிக் கொண்டால் உலகமே இருண்டு விட்டது என எண்ணுமாம்'* – என்பார்கள்.

அதுபோன்றுதான், அமெரிக்காவின் இந்த உத்தியோகபூர்வ அறிக்கையை உள்ளூரில் வெளியிடாமல் மூடி மறைத்து விட்டால் அந்த அறிக்கையில் கூறப்பட்ட விடயங்கள், பிரச்சினைகள் சிக்கலாக வராது, தீர்ந்து விடும் என தென்னிலங்கைத் தரப்பினர் நம்புகின்றனர் போலும்.

பாவம். தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்கின்றனர்.

இந்த அறிக்கையின் விளைவு – பெறுபேறு – கடைசியாகக் கொழும்பின் கழுத்தை இறுக்கும் போதுதான் அவர்கள் விழித்துக் கொள்வார்கள் போலும்.

– மின்னல் –

## கறுப்பு ஜூலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நினைவேந்தலை முன்னிட்டு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் நேற்று காலை 10 மணிமுதல் முற்பகல் 11 மணி வரை இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், கறுப்பு ஜூலை தமிழினப் படுகொலை நாள், கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் எங்கே?, இன அழிப்புக்கு நீதி வேண்டும், அரசியல் கைதிகளை விடுதலை செய், வெளியேறு வெளியேறு இராணுவமே வெளியேறு உள்ளிட்ட பல்வேறு கோஷங்களை எழுப்பினர்.

இந்தப் போராட்டத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

## புலிக்குளம் வேலைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நீர்ப்பாசனத் திணைக்களப் பணிப்பாளர் ராஜகோபு மற்றும் அறிவியல்நகர் யாழ். பல்கலைக்கழக பீடாதிபதிகள், மற்றும் பணியாளர்கள் கலந்துகொண்டு சம்பிராதாயபூர்வமாக வேலைத்திட்டத்தை ஆரம்பித்துவைத்தனர்.

புலிக்குளத்திலிருந்து அறிவியல்நகர் யாழ்.பல்கலைக்கழக வளாகத்துக்கு வாய்க்கால் மூலம் நீரைக் கொண்டுவருவதற்கான முதல் கட்டமாக, சிறு குளம் ஒன்றைக் கட்டமைப்புக்கும் பணிகள் நேற்று ஆரம்பித்துவைக்கப்பட்டன.

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத்தலைவர், கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மூலமாக, நீர்ப்பாசன அமைச்சர் சமல் ராஜபக்ஷவிடம் பல்கலைக்கழகம் சார்பாக விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கமைவாக, இந்தத் திட்டத்துக்கான நிதியாக 15 மில்லியன் ரூபாவை நீர்ப்பாசன இராஜாங்க அமைச்சு ஒதுக்கியுள்ளது.

இந்தத் திட்டத்தின் முன்னேற்ற நிலை குறித்து கடந்த 23ஆம் திகதி கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நடத்திய விசேட கலந்துரையாடலில் ஒருங்கிணைப்புக் குழு இணைத்தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவனாந்தா பல்கலைக்கழக பீடாதிபதிகள் மற்றும் பிரதி நீர்ப்பாசன பொறியியலாளர் ஆகியோரிடம் கேட்டறிந்திருந்தார்.

இதன்போது நடைபெற்ற கலந்துரையாடலுக்கு அமைவாக இந்தத் திட்டம் தொடர்பானவிரிவான அறிக்கை, பல்கலைக்கழக துணைவேந்தரின் கையெழுத்துடன், விவசாய பீடாதிபதி கலாநிதி வசந்தரூபா அவர்களால், பல்கலைக்கழக பேரவை உறுப்பினரும், கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத்தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் மேலதிக இணைப்பாளருமான கோ.றுஷாங்கனிடம் கையளிக்கப்பட்டிருந்தது.

இந்தத் திட்டத்தின் ஆரம்ப கட்டமாக 7 மில்லியன் ரூபாவில் சிறு குள கட்டுமானப் பணிகள் மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டு, கிளிநொச்சி மாவட்ட பிரதி நீர்ப்பாச திணைக்களப் பணிப்பாளரின் நெறிப்படுத்தலில் பணிகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

## ரிஷாத்தின் மனைவி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ரிஷாத் பதியுதீனின் 42 வயதான மனைவி, மனைவியின் 70 வயதுடைய தந்தை மற்றும் சிறுமியை பணிக்கு அமர்த்திய தரகர் ஆகியோரே இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

சிறுமி ஹிஷாலினி மரணம் தொடர்பில், இதுவரை 20 பேரிடம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ள அதேவேளை தற்போது இரண்டு பொலிஸ் குழுக்கள் விசாரணைகளை மேற்கொள்கின்றன.

எவ்வாறாயினும். இதுவரை முன்னெடுக்கப்பட்ட விசாரணைகள் தொடர்பில் திருப்திகொள்ள முடியாதுள்ளதாக சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

அந்த அதிகார சபையின் தலைவர் முதித விதானபத்திரன இதனைத் தெரிவித்துள்ளார்.

## ரிஷாத்தின் மைத்துன...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ரிஷாத் பதியுதீனின் மைத்துனர் இன்று வரை பொரளை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

டயகம சிறுமி பணிக்கு அமர்த்தப்படுவதற்கு முன்னதாக 32 மற்றும் 22 வயதுடைய மேலும் இரண்டு பெண்கள் ரிஷாத் பதியுதீனின் வீட்டில் பணியாற்றியிருந்தனர்.

ரிஷாத்தின் இல்லத்தில் அவர்கள் இரண்டு பேரையும், பணிக்கு அமர்த்திய தரகரே ஹிஷாலினியையும் கொண்டு சென்று சேர்த்துள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

மேற்படி இரு பெண்களில் 2015 ஆண்டு முதல் 2019ஆம் ஆண்டு வரையில் பணியாற்றிய 22 வயதுடைய பெண்ணொருவரை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய குற்றச்சாட்டிலேயே ரிஷாத் பதியுதீனது மனைவியின் இளைய சகோதரன் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

கைதான சந்தேகநபர், மதவாச்சிப் பகுதியைச் சேர்ந்த 44 வயதுடையவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆடிக் கலவரத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தமிழர் தாயகத்தின் பல பகுதிகளிலும் இடம்பெற்றது.

ஜூலை படுகொலையின் 38 ஆவது ஆண்டு நினைவு நாளான நேற்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் தமிழர் தாயகத்தின் வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் ஆர்ப்பாட்டங்களும் நினைவேந்தல் நிகழ்வுகளும் இடம்பெற்றன.

யாழ்ப்பாணம், வவுனியா, கல்முனை ஆகிய இடங்களில் இந்த ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றமையுடன் மட்டக்களப்பில் நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது.

வவுனியாவில் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலை மையில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் கட்சியின் வவுனியா மாவட்ட அமைப்பாளர் மயூர சர்மா, செயலாளர் சு.தவபாலன், உபதலைவர்களில் ஒருவரான கஜேந்திரகுமார் சிவபாதம் மற்றும் கட்சியின் பிரசார செயலாளர் சட்டத்தரணி நடராஜர் காண்டீபன், வவுனியா நகர சபை உறுப்பினரும் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் எம்.பியின் செயலாளருமாகிய சக்திதாஸ் தனுஸ்காந்த் மற்றும் கட்சி உறுப்பினர்களும் ஆதரவாளர்களும் கலந்துகொண்டனர்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் கட்சியின் உறுப்பினர்கள் பொதுமக்கள் பதாதைகளைத் தாங்கியவாறு பங்குபற்றியிருந்தனர்.

தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் தமிழ் மக்கள் மீதான அடக்குமுறைகள் இனப்படுகொலைகளுக்கு சர்வதேசம் பக்கச்சார்பற்ற விசாரணை நடத்த வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வலியுறுத்தினார்.

மேலும், தமிழ் அரசியல் கைதிகள் அனைவரும் உடனடியாக விடுதலை செய்யப்படல் வேண்டும், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்பது வெளிப்படுத்தப்படல் வேண்டும், தமிழ்த் தேசமும் இறைமையும் அங்கீகரிக்கப்பட வேண்டும், தமிழர்களது காணி சுவீகரிப்பு நடவடிக்கைகள் நிறுத்தப்படல் வேண்டும், இராணுவமயமாக்கல் நிறுத்தப்படல் வேண்டும், தமிழர் தாயகத்திலிருந்து இராணுவம் வெளியேற வேண்டும் என்னும் வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டிருந்த பொதுமக்கள் தாங்கியிருந்தார்கள்.

# கோப்பாயில் 9 பேர் கைது!

**(எஸ்.நிதர்ஷன், இ.கலையமுதன்)**

யாழ்ப்பாணம், கோப்பாய் பொலிஸ் பிரிவில் நேற்று அதிகாலை 2 மணி தொடக்கம் காலை 6 மணி வரை முன்னெடுக்கப்பட்ட விசேட சுற்றிவளைப்புத் தேடுதலில் 9 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அவர்களில் மூவர் அண்மைய வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்று ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்துள்ளது என்றும் பொலிஸார் கூறினர்.

யாழ்ப்பாணம் மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரியந்த லியனகேயின் வழிகாட்ட லிலும் அவரது பங்கேற்புடனும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் கோப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் பங்களிப்புடன் இந்த விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது 9 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களில் 22, 23 மற்றும் 25 வயதுடைய மூவர் வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்று ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

ஏனைய 6 பேரும் விசாரணைகளின் பின்னர் விடுவிக்கப்படுவார்கள் என்றும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

# முடக்கத்தில் இருந்து 2 பகுதிகள் விடுவிப்பு

மாத்தளை மாவட்டத்தில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த இரு கிராமங்கள் நேற்று காலை 6 மணி முதல் அமுலாகும் விடுவிக்கப்பட்டுள்ளன என்று கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மத்திய நிலையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

## யாழில் 29 பேர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவர்களுடன் புதுக்குடியிருப்பு தனிமைப்படுத்தல் நிலையத்தில் ஒருவர் தொற்றாளராக அடையாளம் காணப்பட்டுள்ளார்.

## கொரோனா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பதிவான கொரோனா சாவுகளின் மொத்த எண்ணிக்கை 4 ஆயிரத்து 2 ஆக அதிகரித்துள்ளது.

நேற்றுமுன்தினம் உயிரிழந்த 43 பேரில் 17 பெண்களும், 26 ஆண்களும் உள்ளடங்குகின்றனர்.

## தமிழே உச்சரிக்கத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாணத்திலேயே பிரதம செயலாளர் பதவிக்குத் தகுதியான 12 உத்தியோகத்தர்கள் இதற்காகக் காத்திருந்தனர். அதிலும் குறிப்பாக 1991ஆம் ஆண்டு நிர்வாக சேவைக்குத் தேர்வான 7 அதிகாரிகளும், 1995ஆம் ஆண்டு நிர்வாக சேவைக்கு தேர்வான 3 அதிகாரிகளும் இதனை எதிர்பார்த்தபோதும் செல்வாக்கை மட்டும் தகுதியாகக்கொண்டு 1995ஆம் ஆண்டு நிர்வாக சேவைக்குத் தேர்வானவருக்கு பிரதம செயலாளர் பதவி வழங்கப்பட்டுள்ளது. இது முற்றிலும் அரசியல் நோக்கம் கொண்டதாகவே காணப்படுகின்றது.

பிரதம செயலாளர் பதவி என்பது மக்களோடும் உத்தியோகத்தர்களோடும் நேரடியாகவே தொடர்புபட்ட மாகாண ரீதியிலான ஒரு பணியாகும். அந்தப் பதவியின் மூலம் யாருக்குச் சேவையாற்ற வேண்டுமோ அவர்களின் மொழி தெரியாதவரை பதவிக்கு நியமித்து மாகாண சபை என்பது மக்களின் தேவையை பூர்த்தி செய்ய உருவாக்கப்பட்ட கட்டமைப்பு அல்ல, அரசின் தேவையை பூர்த்தி செய்ய அமைக்கப்பட்ட கட்டமைப்பு என்பதை இந்த அரசு எடுத்து இயம்பியுள்ளது – என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# 15 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து கறுப்புத் துணி கட்டி மௌன கவனவீர்ப்பு

## மன்னாரில் நேற்று நடந்தது போராட்டம்






கறுப்பு ஜுலை தினத்தை முன்னிட்டு கறுப்புத் துணி கட்டி மௌன கவனவீர்ப்புப் போராட்டமொன்று நேற்று (வெள்ளிக்கிழமை) முன்னெடுக்கப்பட்டது.

தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில் 15 அம்சக் கோரிக்கையை முன்வைத்து நேற்று காலை 9.30 மணியளவில் மன்னார் மாவட்ட செயலகத்துக்கு முன்பாக இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது 'கொத்தலாவல பல்கலைக்கழக சட்ட மூலத்தை மீளப்பெறு, ஹிஷாலினியின் மரணத்துக்கு நீதியான விசாரணை வேண்டும், எரிபொருள் விலையை அதிகரிக்காதே, விவசாயிகள் மற்றும் கடற்றொழிலாளர்களுக்கு மானியம் வழங்கு, ஏழைகளை வஞ்சிக்காதே, அத்தியாவசியப் பொருள்களுக்கு விலை அதிகரிக்காதே, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கு விரைந்து முடிவு சொல், ஜனநாயகப் போராட்டங்களை நசுக்காதே, கொரோனாவை காட்டி பொய் வழக்கு போடாதே' உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை போராட்டக்காரர்கள் முன்வைத்திருந்தனர்.

மேலும் அவர்கள் பல்வேறு வசனங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியவாறு, போராட்டத்தில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தமிழர்களை நினைவு கூரும் சுவரொட்டிகள் கிழித்தெறிந்த இராணுவ, புலனாய்வாளர்கள்



கறுப்பு ஜுலையை நினைவு கூரும் வகையில் யாழ்ப்பாணத்தில் தமிழ் தேசிய பண்பாட்டுப் பேரவையால் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

ஆனால் அனைத்தும் இரவோடு இரவாக பொலிஸ், இராணுவம், புலனாய்வாளர்களால் முற்று முழுதாக கிழித்தெறியப்பட்டுள்ளன.

இந்த சம்பவம் தொடர்பில் தமிழ்த் தேசிய பண்பாட்டுப் பேரவை கடும் கண்டனம் வெளியிட்டுள்ளது.

ஜனநாயக நாட்டில் அன்று தொடக்கம் இன்று வரை தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட அநீதிகளை நினைவு கூருவதற்கு ஶ்ரீலங்கா அரசு தடை போடுகின்றது என்றால் இங்கு ஜனநாயகம் எங்கு உள்ளது எனவும் கேள்வியெழுப்பியுள்ளது.

இலங்கை அரசின் மிலேச்சத்தனமான இந்தச் செயலை வன்மையாகக் கண்டிப்பதாகவும் தமிழ்த் தேசிய பண்பாட்டுப் பேரவை தெரிவித்துள்ளது.

# கொரோனாவால் சாவடைந்தவர்கள் எந்தத் தடுப்பூசிகளும் பெறாதவர்கள்

## சுகாதார அமைச்சர் பவித்ரா தகவல்



எந்த ஒரு தடுப்பூசியையும் பெற்றுக் கொள்ளாதவர்களே இதுவரை தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டும் கொரோனாவால் உயிரிழந்தும் உள்ளார்கள் என சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.

தம்மையும் பிறரையும் பாதுகாக்க அனைவரும் தடுப்பூசி பெற்றுக்கொள்வது அவசியம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

போதியளவு கொரோனா வைரஸ் தடுப்பூசிகள் நாட்டுக்கு கிடைக்கப் பெற்றுள்ளன எனவும் மேலும் தடுப்பூசிகள் விரைவில் கிடைக்கவுள்ளன எனவும் அனைவருக்கும் தடுப்பூசியை பெற்றுக்கொடுப்பதற்கான வேலைத்திட்டங்கள் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தடுப்பூசி வழங்கும் நடவடிக்கைகள் சாத்தியமாக முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் தடுப்பூசியை பெற்றுக் கொள்ள வருகை தரும் மக்களின் எண்ணிக்கை சில தினங்களாகக் குறைவடைந்து காணப்படுவதாகவும் தெரிவித்த அமைச்சர், மக்களின் வருகை மந்தமாக காணப்படுவதாக சுகாதாரத்துறையினர் தமக்கு அறிவித்துள்ளனர் எனவும் தெரிவித்துள்ளார்.

இதுவரை கொரோனா வைரஸ் காரணமாக உயிரிழந்துள்ளவர்கள் மற்றும் தீவிர சிகிச்சைப் பிரிவில் அதற்கான சிகிச்சைகளை மேற்கொள்பவர்கள் எந்த ஒரு தடுப்பூசியையும் பெற்றுக் கொள்ளாதவர்கள் எனத் தகவல்கள் மூலம் அறிய முடிகின்றன.

அந்த நிலையில் மக்களின் உயிர்களைப் பாதுகாப்பதே அரசாங்கத்தின் ஒரே நோக்கம். 60 வயதுக்கு மேற்பட்டோர் மற்றும் நோய்களோடு வாழ்பவர்கள் தடுப்பூசிகளைப் பெற்றுக் கொள்வது மிகவும் அவசியம் என்றும் அதன் மூலம் தம்மைப் பாதுகாத்துக் கொள்ளவும் பிறரைப் பாதுகாக்கவும் முடியும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# இந்தியாவின் உதவியுடன் நாடாளுமன்றுக்கு மின்சாரம்

நாடாளுமன்றம் அமைந்துள்ள தியவன்ன ஓயாவை கேந்திரமாகக் கொண்டு முதலாவது மிதக்கும் சூரிய ஒளி மின்சக்தி நிலையத்தை அமைக்கத் திட்டமிட்டுள்ளதாக அமைச்சர் டளஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்துக்குத் தினமும் தேவையான மின்சாரத்தை பெற்றுக்கொள்ளும் வகையில் இந்த மிதக்கும் சூரிய ஒளி மின்சார உற்பத்தி நிலையம் ஏற்படுத்தப்படவுள்ளது.

இந்த சூரிய ஒளிமின்சார உற்பத்தி நிலையத்தின் மூலம் 1.5 மெகாவோட் மின்சாரத்தை உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளதுடன், அதற்கான ஆய்வு நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தத் திட்டத்தின் முதல் கட்ட பணிகளுக்கான நிதியை இந்திய அரசாங்கம் வழங்க உள்ளது எனவும் அமைச்சர் அழகப்பெரும குறிப்பிட்டுள்ளார்.

# தனிமைப்படுத்தல் மீறிய 152 பேர் கைது

தனிமைப்படுத்தல் உத்தரவுகளை மீறும் வகையில் செயற்பட்டார்கள் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் 152 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று (வெள்ளிக்கிழமை) காலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த குற்றச்சாட்டுக்காக கடந்த ஒக்ரோபர் 30 முதல் இது வரையான காலப் பகுதியில் 51 ஆயிரத்து 733 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களில் 45 ஆயிரத்துக்கும் அதிகமானோர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. 7 ஆயிரம் பேர் மீது வழக்குத் தொடரப்படவுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் றோஹண தெரிவித்துள்ளார்.

# ஹிஷாலினி எரிக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டமை; மட்டு. உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள் கண்டனம்

முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதினின் வீட்டில், சிறுமி ஒருவர் எரிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளமைக்கு, மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ளனர்.

மேலும் குறித்த சம்பவத்தில் முறையான விசாரணை முன்னெடுக்கப்படுவதை ஜனாதிபதி உறுதி செய்ய வேண்டும் எனவும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை மட்டக்களப்பிலுள்ள தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்களே இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

மேலும் சிறுமியின் படுகொலையின் உண்மைத் தன்மைகள் வெளிக்கொணரப்பட்டு, சம்பந்தப்பட்டவர்களுக்கு தண்டனை வழங்கப்பட வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# அச்சுவேலி உலவிக்குளம் சித்தி விநாயகர் ஆலயத்தில் இராணுவத்தின் செயற்பாட்டினால் மக்கள் அதிருப்தியில்!

யாழ்ப்பாணம் - அச்சுவேலியிலுள்ள பிள்ளையார் ஆலயத்தில் இராணுவத்தினர் வழிபாடுகளை மேற்கொண்டு, சாமி காவியும் உள்ளனர்.

அதாவது சில ஆலயங்களில், மேலங்கிகளுடன் ஆண்கள் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில், இராணுவத்தினர் குறித்த ஆலயத்திலுள்ள வில்லு மண்டபம் வரை மேலங்கிகளுடன் சென்று வழிபட்டமைக்கு மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

அச்சுவேலி - உலவிக்குளம் சித்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்தா அலங்கார உற்சவம் தற்போது நடைபெற்று வருகின்றது. எனினும் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற தேர்த்திருவிழாவின்போது பஞ்சமுக பிள்ளையார், சிறிய தேரில் எழுந்தருளி, உள்வீதி உலா வந்தார்.

இதன்போது எழுந்தருளி பிள்ளையாரை இராணுவத்தினர் பிள்ளை தண்டில் காவி உள்வீதி உலா வந்தனர்.

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக பக்தர்கள் பலரும் ஆலயத்திற்குள் உள்நுழைய அனுமதிக்கப்படாத நிலையில், இராணுவத்தினர் பலர் ஆலயத்தினுள் சென்று வழிபாடுகளை மேற்கொண்டதுடன் சுவாமி காவியும் உள்ளனர்.



இவ்வாறு ஆலயத்திற்கு அருகில் வசிப்போர் கூட வெளியே நிற்க, இராணுவத்தினர் ஆலயத்தினுள் சென்று வழிபாடுகளை மேற்கொண்டு சுவாமி காவியமை, பல வருடங்களாக வழிபாடு செய்து வரும் அடியவர்களிடம் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# மேற்குலகின் ஏளன நிலை

**இலங்கை குறித்து சில முக்கிய தீர்மானங்களை எடுக்க வேண்டிய கடப்பாட்டில் – பொறுப்பில் – சர்வதேசம் இருக்கின்றது.**

**அதுவும் ஜெனிவாவில் இன்னும் இரண்டு மாதங்களில் நடைபெறப் போகும் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் அடுத்த கூட்டத் தொடரில் இலங்கை விவகாரம் மீளாய்வு செய்யப்படப் போகின்றது.**

**ஏற்கனவே பிரிட்டன் உட்பட்ட ஐரோப்பிய நாடுகளின் ஆதரவுடன் கடந்த மார்ச்சில் இலங்கை தொடர்பாக ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதில் – நடைமுறைப்படுத்தச் செய்வதில் – எந்த முன்னேற்ற நகர்வையும் காட்ட முடியாத இக்கட்டில் நிற்கும் மேற்கு நாடுகள் அப்போது – செப்ரெம்பர் அமர்வின் போது – என்ன செய்யப் போகின்றன என்பதே கேள்வி.**

**எது, எப்படி என்றாலும் இம்முறை இலங்கைக்கு எதிரான தீர்க்கமான நடவடிக்கைகளை – பிரதிபலிப்புகளை – காட்ட வேண்டிய கட்டாயம் மேற்குலகுக்கு உண்டு.**

**இலங்கையினதும் அதன் ஆதரவு நாடுகளான சீனா, பாகிஸ்தான் போன்றவற்றினதும் எதிர்ப்புக்கு மத்தியில் இலங்கை தொடர்பாகத் தாம் நிறைவேற்றிய தீர்மானம் சம்பந்தமாக ஏதேனும் நகர்வை – முன்னேற்றத்தை – வெளிப்படுத்த வேண்டிய இக்கட்டு மேற்குலகுக்கு.**

**இல்லையேல் வலிமையான தேசமான சீனாவின் பின்புலப் பலத்தில் நிற்கும் இலங்கையை மேற்குலகினால் அசைக்கவே முடியாது என்ற பதிவே சர்வதேச உறவு நிலைப்பாட்டில் காத்திரமான குறியீடாகி விடும்.**

**இலங்கைக்கான ஜி.எஸ்.பி. வரிச் சலுகையை விலக்கும் முடிவுக்குரிய முன்னறிவித்தலை ஐரோப்பிய ஒன்றியம் இலங்கைக்கு மீண்டும் வழங்கியமை இந்தப் பின்புலத்தில்தான் என்பதை நாம் கவனிக்க வேண்டும்.**

**இலங்கையில் கடந்த காலத்தில் – குறிப்பாக யுத்தத்தின் இறுதிக் கட்டத்தின் போது – இடம்பெற்ற – மனித உரிமை மீறல்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், யுத்தக் குற்றங்கள் தொடர்பில் உண்மைகள் கண்டறியப்பட்டு, பொறுப்புக்கூறல் நிலை நாட்டப்பட்டு, இழப்பீடுகள் வழங்கப்பட்டு, மீள நிகழாமை உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பது சர்வதேசத்தினதும் பாதிக்கப்பட்ட தரப்புகளினதும் எதிர்பார்ப்பாகவும், வேண்டுகோளாகவும், வற் புறுத்தலாகவும் உள்ளது.**

**இருந்தாலும், அதையும் தாண்டி சமகால மனித உரிமைகள் நிலைவரம் குறித்தும் கரிசனை தெரிவிக்கப்பட்டே வந்தது.**

**அந்த நிலைமையும் மோசமடைந்து வருகின்றமையை சர்வதேசம் ஊன்றிக் கவனிக்க வேண்டிய சூழ்நிலை – ஆபத்து – இப்போது ஏற்பட்டிருக்கின்றது.**

**குறிப்பாக அரச படைகளினதும், ஆட்சித் தரப்பைக் கொண்டு நடத்தும் பௌத்த, சிங்களப் பேரினவாதிகளினதும் கொடூரங்களில் கொல்லப்பட்ட சிறுபான்மை மக்களின் – குறிப்பாகத் தமிழர்களின் – உறவுகள், அந்த இழப்புகளில் உயிரிழந்தவர்களை நினைவு கூரக் கூடப் பேரினவாத வெறி தடுத்து நிற்கின்றது.**

**யுத்தத்தின் போது கொல்லப்பட்ட – பலவந்தமாக காணாமலாக்கப்பட்ட – போராளிகளை நினைவு கூரக் கூடாது என்றார்கள்.**

**பின்னர் அரசின் கொடூர யுத்த நடவடிக்கைகளில் களப்பலியான பொதுமக்கள், அப்பாவிகளைக் கூட அவர்களின் உறவுகள் நினைவு கூரக் கூடாது என்று தடுத்தது பௌத்த, சிங்கள மேலாதிக்கம்.**

**நவாலி தேவாலயத்திலும், நாகர்கோவில் மகா வித்தியாலயத்திலும் அப்பாவி அகதிகள் மீதும், மாணவர்கள் மீதும், பௌத்த, சிங்கள இனவாத அரசின் விமானப் படை நடத்திய தாக்குதலில் கொல்லப்பட்டவர்களை நினைவு கூரவும் பௌத்த, சிங்கள இனவெறி மேலாண்மை தடுத்தது.**

**இப்போது தமிழ் மக்கள் மீது ஊழிக் கூத்தாகக் கட்டவிழ்ந்த ஜூலைக் கலவர வெறியாட்டத்தில் கொல்லப்பட்ட பல்லாயிரம் தமிழர்களை நினைவு கூரவும் அதே பேரினவாத வெறி – பௌத்த, சிங்கள திமிர்த்தனம் – மேலாண்மைக் குரூர மமதை – தடை விதித்து நிற்கின்றது.**

**கறுப்பு ஜூலையை நினைவுபடுத்தி ஒட்டப்பட்ட போஸ்டர்களை இலங்கை அரசுப் படைகளின் புலனாய்வுப் பிரிவு இரவோடு இரவாக ஆள் வைத்து அகற்றியுள்ளது. நினைவு கூரலுக்கு எதிராக நீதிமன்றம் மூலம் தடை விதிக்கின்றது.**

**இலங்கை விடயத்தில் யுத்தத்தில் உயிரிழந்த, காணாமலாக்கப்பட்ட, படுகொலையுண்ட தங்களின் உறவுகளுக்காக நினைவு கூரும் உரிமையைக் கூட பாதிக்கப்பட்ட சிறுபான்மையினரான தமிழருக்கு பெற்றுத் தர முடியாத மேற்குலகின் பங்களிப்பு அர்த்தமேயற்றது. பயனற்றது. ஏளனத்துக்குரியது. அதுவே உண்மை.**

# மக்கள் பணிகளை முன்னெடுப்பதற்கு தேவையான நிதி விரைவில் ஒதுக்கம்

## நிதி அமைச்சர் பஸில் உத்தரவாதம்



கொழும்பு, ஜூலை 24

மக்கள் பணிகளை முன்னெடுப்பதற்குத் தேவையான நிதிகள் விரைவில் ஒதுக்கப்படும் என நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஆளுநர்கள், மாகாண, மாவட்டச் செயலாளர்கள் உள்ளிட்ட அதிகாரிகளுடன் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக, நாட்டில் ஏற்பட்டிருக்கும் நிலைமைகள் காரணமாக மக்களை நெருக்கடிக்குள்ளாக்காத வகையில் செயற்படுகின்றமை மக்கள் பிரதிநிதிகளதும், அதிகாரிகளதும் பொறுப்பு எனவும் அவர் கூறியுள்ளார்.

# ஹிஷாலினியின் மரணத்துக்கு நீதி வேண்டி வவுனியாவில் கையெழுத்துப் போராட்டம்



முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் வீட்டில் பணிபுரிந்து மரணமடைந்த சிறுமி ஹிஷாலினியின் மரணத்துக்கு நீதி வேண்டி, கையெழுத்துப் போராட்டமொன்று வவுனியாவில் நேற்று (வெள்ளிக்கிழமை) முன்னெடுக்கப்பட்டது.

சுயாதீன தமிழ் இளைஞர்களின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்நிலையில் போராட்டம் தொடர்பாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளவை வருமாறு -

சிறுமி ஹிஷாலினியின் மரணத்துக்கு நீதி வேண்டி கை எழுத்துப் போராட்டத்தை ஆரம் பித்துள்ளோம்.

மேலும் நாடு முழுவதும் உள்ள சிறுவர் மற்றும் சிறுமிகள் வேலைக்கு அமர்த்தப்படுகின்றனர். அவர்கள் பணி செய்யும் பகுதிகளில் பல்வேறு துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றனர். எனவே இதற்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

குறிப்பாக ஹிஷாலினியின் மரணத்துக்கு காரணமானவர்கள் தண்டிக்கப்பட்டு, நீதி நிலைநாட்டப்பட்ட வேண்டும்.

மேலும் சிறுவர்களை வேலைக்கு அமர்த்துகின்ற தரகர்களுக்கும் கடுமையான தண்டணை வழங்கப்பட வேண்டும். - என அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இதேவேளை இந்த கையெழுத்து பிரதிகள், ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# சிறுமி ஹிஷாலினியின் சோக மரணத்தை அர்த்தம் கொண்டதாக மாற்றுவோம்!

## தமிழ் தேசியக் கட்சி அழைப்பு

மலையகத்தைச் சேர்ந்த சிறுமி ஹிஷாலினியின் சோக மரணம் தமிழ் மக்கள் மத்தியில் மட்டுமன்றி, மனிதாபிமான உணர்வு கொண்ட அனைவரின் மனங்களிலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த சோகச் சூழ்நிலையின் உணர்வலைகள் காலப் போக்கில் ஓய்ந்து போய்விட அனுமதிக்காமல், அவற்றுக்கு உத்வேகம் கொடுத்து அர்த்தமுள்ளதோர் இலக்கை நோக்கி நெறிப்படுத்திட, அக்கறையுள்ள அனைவரின் கரங்களும் இணைய வேண்டும் என நாம் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் ந.ஸ்ரீகாந்தா.

இது தொடர்பில் அவர் ஊடகங்களுக்கு வழங்கிய அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

சுதந்திர இலங்கையின் முதல் வருடத்திலேயே, குடி உரிமையும் வாக்குரிமையும் பறிக்கப்பட்டு நாடற்றவர்களாக மாற்றப்பட்ட மலையகத் தமிழர் சமூகம், அதன் பின் 15 வருடங்கள் கழித்து இலங்கை, இந்திய அரசுகளுக்கிடையில் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் ஊடாக, மந்தைகள் போல பிரித்து பங்கீடு செய்யப்பட்ட வரலாற்றுத் துரோகத்தின் பின்னணியில், அதன் ஒரு பகுதியினருக்கு வழங்கப்பட்ட குடியுரிமை மற்றும் வாக்குரிமையோடு சமீபகாலமாக எழுச்சி பெறத் தொடங்கியுள்ளது.

ஆயினும், மலையகத் தமிழர் மத்தியில் தொடர்ந்து நிலவும் கடுமையான தொழிற் தட்டுப்பாடு, போதிய ஊதியமின்மை உட்பட்ட பொருளாதாரப் பிரச்சினையே இந்தக் கோர மரணம் நிகழ்ந்த சூழ்நிலையின் அடிப்படைக் காரணமாக உள்ளது.

கல்வி கற்க வேண்டிய வயதில் கொழும்பு உட்பட தொலைதூர இடங்களில், தனியார் வீடுகளிலும், உணவு விடுதிகள், வியாபார நிறுவனங்கள் போன்றவற்றிலும் பணியாளர்களாக வேலைக்கு அமர்த்தப்படும் மலையகப் பிள்ளைகள் பல்வேறு அவலங்களுக்கு ஆளாகும் கொடுமையான சூழ்நிலைக்கு முடிவு கட்டப்படுவதன் மூலம், இந்த சோக மரணத்தை நிரந்தர அர்த்தம் கொண்டதாக நாம் அனைவரும் மாற்றி அமைக்க முன்வர வேண்டும்.

இந்த மரணம் தொடர்பான புலன் விசாரணைகளைத் தொடர்ந்து ஊன்றி அவதானித்து, அவை உரிய முறையில் விரைந்து முன்னெடுக்கப்படுவதன் மூலம் குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு நீதியின் முன் நிறுத்தப்பட்டு, தண்டிக்கப்படுவதை உறுதிப்படுத்துவது எவ்வளவு அவசியமானதோ, அதே போல, வெளிச்சத்துக்கு வராமல் மூடி மறைக்கப்பட்ட இத்தகைய பல குற்றங்களுக்கு அடித்தளம் அமைத்திருக்கும் சமூக பொருளாதார சூழ்நிலையை முற்று முழுதாக மாற்றி அமைப்பதில் அக்கறையுள்ள அனைவரும் ஆர்வத்தோடு இணைந்து செயற்படுவது இன்றைய கட்டாயத் தேவையாக உள்ளது.

சிறுமியின் மரணத்தைத் தொடர்ந்து மலையகத் தமிழ் சமூகத்தின் கல்வியியலாளர்கள், தொழில் அதிபர்கள் உட்பட சமூக நலன் விரும்பிகள் சிலர் ஒன்றாகவே சந்தித்து சிந்தித்திருப்பது, உற்சாகப்படுத்தப்பட வேண்டிய நல்லதோர் ஆரம்பமாகும். இந்த முயற்சிக்கு வடக்கு கிழக்கைச் சேர்ந்த ஒத்த நோக்குடையோரும் அனுசரணை வழங்க முடியும்.

காலத்தால் அடித்துச் செல்லப்படக் கூடிய உணர்வலைகளோடு மட்டும் நின்றுவிடாமல், அறிவார்ந்த அணுகுமுறையுடனும், ஆக்கபூர்வமான செயற்திட்டங்களோடும், இந்த மனிதாபிமான பிரச்சினையை எதிர்கொண்டு மலையகத் தமிழ் உடன் பிறப்புக்களின் துயர் களைய, இன உணர்வு கொண்ட அனைவரின் கரங்களும், அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பால் இணைந்து செயற்பட வேண்டும் என்று நாம் அழைப்பு விடுக்கின்றோம். - என்றுள்ளது.

எஸ்.டி. சிவநாயகம் நினைவுப் பகிர்வு

# தமிழ் ஊடகத்துறையின் ஜாம்பவான் எஸ்.டி.எஸ்.!

ந.வித்தியாதரன்

அங்கம் 23

அடுத்த நாள் காலையில் நான் அலுவலகத்துக்குச் சென்றபோது 'தினபதி' ஆசிரிய பீடம் வழமைக்கு மாறாகப் பரபரப்பாக இருந்தது. நாட்டின் அரசுத் தலைவரின் அரசியல் தலைவிதியைத் தீர்மானிக்கும் அரசமைப்பு விவகார வழக்கின் தீர்ப்பையே நாடாளுமன்றத்தில் சபாநாயகர் அறிவிக்க முன்னர் வெளியிட்ட பெருமையுடன் நான் அலுவலகத்துக்குள் கொஞ்சம் திமிராகத் தான் நுழைந்தேன். ஆனால் அங்கு நிலைமை வேறு விதமாக இருந்தது. சீனியர் ரிப்போர்ட்டர்கள் எல்லோரும் என்னைப் பரிதாபக் கோலத்தில் பார்த்த மாதிரி எனக்கு தோன்றியது.

நான் 'குட் மோர்னிங்' என்று கூறிய வாறு எனது மேசையில் போய் அமரவும் பக்கத்து மேசையில் இருக்கும் முஸ்லிம் ரிப்போர்ட்டர் – என் நண்பன் – காதைக் கடித்தான்.

*"மச்சான் தெரியுமோ இன்றைய உன்ர நியூஸால சிக்கல் போல"* என்றான் அவன்.

எனக்கு 'ஷொக்' அடித்த மாதிரி இருந்தது.

*"ஏன் என் செய்தி தவறா?"* – என்று நான் அவனிடம் கேட்டேன்.

*"இல்லை, இல்லை, செய்தி சரி. ஒரு பிழையும் இல்லை. ஆனால் காலையில் பார்லிமெண்ட் ரிப்போர்ட்டர் கோல் எடுத்தவர். இந்தச் செய்தியை முற்கூட்டியே வெளியிட்டது சம்பந்தமாக எங்கட பேப்பரை இன்று பெயர் சொல்லி அங்கே ஏதோ பிரச்சினையாம். நியூஸ் எடிட்டருக்கு சொன்னவர்கள். அவர் ஆசிரியருக்கும் கோல் அடித்துச் சொன்னவர். ஆசிரியர் தான் வந்து பார்க்கிறேன் என்று சொன்னவராம்."* – என்று அவன் குசுகுசுத்தான்.

பக்கத்தில் இருந்த சீனியர் ரிப்போர்ட்டர்மார் எல்லாம் என்னை நோண்டத் தொடங்கினர்.

*"பார்த்தியோ அவசரப்பட்டு நியூஸ் கொடுத்துப் போட்டு இப்ப முழுசிறாய். பாலிமெண்ட்டுலை ஸ்பீக்கர் அறிவிச்ச பிறகுதான் இந்தத் தீர்ப்பு பப்ளிக் டொக்யூமண்ட். அதுவரைக்கும் தீர்ப்பு இரகசிய ஆவணம்தான். தீர்ப்பிலை நீதிபதிகள் கையெழுத்து வைச்சாலும் அதை திறந்த நீதிமன்றத்திலை நீதிபதிகள் வாசிக்க முன்னர் வெளியிட முடியாது எண்டது கோர்ட்ஸ் ரிப்போட்டரான உனக்குத் தெரியாதோ? அதை நாங்கள் முற்கூட்டியே போட்டது பிழையாம். அது குறித்து நாடாளுமன்றத் தெரிவுக் குழு அமைச்சு விசாரிக்க வேண்டும் என்று அங்கை பார்லிமெண்டில கேட்கினம். செய்தி வெளியிட்ட பத்திரிகையின் ஆசிரியரையும் ரிப்போர்ட்டரையும் பார்லிமெண்ட்டுக்குக் கூப்பிட்டு விசாரிக்க வேண்டும் என்று அங்கு பேசினவையாம். கூப்பிடுவார்கள். போங்கோ. கேள்வி கேட்பார்கள். சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் பதில் சொல்லிப் பார். உன்ரை செய்தியைப் போட்டதால்தான் ஆசிரியருக்கும் சிக்கல். அவரையும் நாடாளுமன்றுக்குக் கூப்பிட்டுச் சிக்கல் தருவார்கள். இரண்டு பேருமாகப் போய் பகிரங்க மன்னிப்புக் கேட்டு சமாளிக்க வேண்டியிருக்கும். பாவம் உன்ரை செய்தியை போட்டதாலே அந்த ஆளும் நாடாளுமன்றத்தில் சலாம் வைக்கவேண்டிய நிலைமை"* – என்று மிரட்டினார்கள்.



நண்பர் எஸ்.டி.எஸ்ஸை விமான நிலையத்தில் வரவேற்கும் சொல்லின் செல்வர் இராஜதுரை

என்னை நெருக்கடியில் – அந்தரத்தில் ஆழ்த்தி – பார்ப்பதில் அவர்களுக்கு ஆளாளுக்குள் போட்டி. என் முகம் பேயறைந்த மாதிரி இருந்தது. இப்போது இருப்பது போல நாடாளுமன்றத்தில் என்ன நடக்கின்றது என்பதை அறிவதற்கான வசதிகள் ஏதும் கிடையாது. அங்கிருக்கும் நமது இரு செய்தியாளர்கள் யாராவது ஒருவர் தொலைபேசி அழைப்பு எடுத்துத் தகவல் தந்தால்தான் உண்டு. ஆனாலும் அங்கிருந்து அவர்கள் சக ரிப்போர்ட்டர்களான எங்களுக்கு அழைப்பு எடுக்க மாட்டார்கள். பெரும்பாலும் செய்தி ஆசிரியர் அல்லது துணை ஆசிரியர் அல்லது உதவி ஆசிரியர்களுக்குத்தான் அழைப்பு எடுப்பார்கள். சில சமயங்களில் உதவி ஆசிரியர் மேசைக்கும் அந்த அழைப்புகள் வருவது உண்டு. நாடாளுமன்றத்தில் இருந்து அவர்கள் எழுதி அனுப்பும் செய்திகள் அடங்கிய என்வலப் கூட எங்கள் கைக்கு கைகளுக்கு வருவதில்லை. செய்தி ஆசிரியருக்குத்தான் வரும். ஃபேக்ஸ் இயந்திரம் கூட அப்போது வரவில்லை.



லண்டனிலிருந்து வந்திறங்கும் எஸ்.டி.எஸ். சிவநாயகத்தை வரவேற்கும் நண்பர் நாராயணதாஸ்

நாடாளுமன்றச் செய்திகளைத் தன்னும் உடனுக்குடன் அறிவிக்கும் வானொலிச் செய்திகள் அப்போது கிடையா. அப்போதைய நிலையில் இலங்கை வானொலியின் மதிய நேரச் செய்திதான். அதிலும் கூட நாடாளுமன்றத்தின் முழு அமர்வு விவரமும் வராது.

எனது செய்தி தொடர்பாக நாடாளுமன்றத்தில் ஏதோ பிரச்சினை போகின்றது. ஆனால் என்னவென்று தெரியவில்லை. நான் தடுமாற்றத்தில் இருந்தேன். செய்தியாசிரியர் கானமயிலநாதனின் வாயை நோண்டினேன். ஆனால் அவரோ தெளிவாகப் பதில் தருபவராக இல்லை. ஏதோ எங்கள் செய்தியால் நாடாளுமன்றத்தில் பிரச்சினை என்றார். அதற்குமேல் அவருக்கும் விளக்கம், விவரம் சரியாகத் தெரியவில்லை.

நேரம் செல்லச் செல்ல என் பதற்றம் அதிகரித்தது. எனக்கு தெரிந்த ஓரிரு தமிழ் எம்.பிக்களுக்கு தொலைபேசி அழைப்பு எடுத்தேன். அந்தக் காலத்தில் கையடக்க தொலைபேசிகள் இல்லை. அதனால் அந்த எம்.பிகளையும் நாடாளுமன்றம் நடந்து கொண்டிருந்த அச்சமயத்தில் பிடிக்க முடியவில்லை.

பிற்பகல் 2 மணி போல ஆசிரியர் வந்தார். அவர் அறையில் வந்து அமர்ந்ததும் சற்று நேரத்தில் செய்தியாசிரியர், துணையாசிரியர் எல்லாம் மாறி மாறி அவரது அறைக்குப் போனார்கள். தனித்தும் கூடியும் இருந்து பேசிக்கொண்டிருந்தனர். பிற்பகல் 3 மணி வரையும் பார்த்தேன். எனக்கு இருப்புக் கொள்ளவில்லை. மெல்ல ஆசிரியரின் கண்ணாடி அறைக்கு முன்னால் போய் நின்றேன். வழக்கமாக ஆசிரியரின் அறையில் அவரது மேசைக்கு முன்னால் உள்ள கதிரையில் துணை ஆசிரியர் இரத்தினசிங்கம்தான் போய் அமர்ந்து, இருந்து பேசுவார். செய்தி ஆசிரியரோ, உதவி ஆசிரியர்களோ அல்லது செய்தியாளர்களான நாங்களோ அறைக்குள் போய் நின்றபடி பேசிவிட்டு வந்து விடுவோம். ஏதும் முக்கியம் என்றால் தான் ஐயா கூப்பிட்டு இருத்தி வைத்துப் பேசுவார்.

அன்று அவரின் அறை வாசலுக்கு நான் சென்றபோது அவர் தொலைபேசியில் யாருடனோ பேசிக் கொண்டிருந்தார். என்னை சைகை காட்டி உள்ளே அழைத்து முன்னால் இருந்த கதிரையில் இருக்கச் சொல்லி கையசைத்தார். அவர் தந்த மரியாதை, கதிரையில் இருக்கச் சொன்ன சைகை எல்லாம் சிக்கல் ஏதும் சீரியஸோ என்ற பயத்தை எனக்கு மேலும் தந்தன. நான் போய் கதிரையில் அமர்ந்தேன். தொலைபேசியைப் பேசி முடித்து வைத்த சிவநாயகம் ஐயா திரும்பி என்னைப் பார்த்தார். தீட்சண்யமான பார்வை அது. பின்னர் மென்மையாகப் புன்முறுவல் பூத்தார். அந்தப் புன்னகை இன்னும் என் நினைவில் நிழலாடுகிறது.

*"என்ன ஐஸே பயந்து போன மாதிரி இருக்கிறீர்?"* என்றார்.

நான் என் சீனியர் ரிப்போர்ட்டர்கள் எனக்கு மாறி மாறிக் கொடுத்த பேதி பற்றிக் குறிப்பிட்டேன். எல்லாவற்றையும் சிரித்தபடி செவிமடுத்தார். பின்னர் ஒரு சிரிப்பு சிரித்தபடி சில விடயங்களைச் சொன்னார்.

*"அவர்கள் சொன்னது சரி. எதிரணி தரப்பில் பிரச்சினை கிளப்பிய கம்யூனிஸ்ட் கட்சி எம்.பி. சரத் முத்தெட்டுவேகம அப்படித்தான் கேட்டிருக்கின்றார். எந்தப் பிரச்சினை வந்தாலும் சமாளிக்கலாம். பயப்படாதீர். பத்திரிகை என்று இருந்தால் பிரச்சினை இருக்கும். அவற்றை எதிர்கொண்டேயாக வேண்டும். இந்தச் செய்தியில் ஒரு விடயம் என்னவென்றால், அது முற்றிலும் உண்மை. வரிக்கு வரி உண்மை. ஒரு சொல்லும் பிழை இல்லை. நீர் தந்த காபன் தாளில் இருந்த வசனங்கள்தான் சபாநாயகர் அறிவித்த தீர்ப்பில் இருந்துள்ளன. ஆகவே பிரச்சினையைச் சமாளிக்கலாம். எதிர்கொள்ளலாம். உஷாராக இருங்கள். தளர்ந்து விடாதீர்கள். எல்லாவற்றுக்கும் நான் இருக்கிறேன். என்னைத் தாண்டித்தான் எதுவும். அப்படி எதுவும் உங்களுக்கு வரவிடமாட்டேன்."*

– என்று உறுதியாகக் கூறினார்.

என்ன நெருக்கடி வந்தாலும் செய்தியாளனை, உதவி ஆசிரியரை காட்டியே கொடுக்கக்கூடாது, காவலரணாக நின்று காப்பாற்றவே வேண்டும் என்ற பத்திரிகை ஆசிரியரின் பாடத்தை அன்றே நான் நேரில் படித்தேன். அதை மனதில் இருத்திக் கொண்டேன். நான் ஆசிரியராகப் பணியாற்றும் இந்த காலம் முழுவதும் சிவநாயகம் ஐயாவின் அந்த வழிகாட்டலை – முன் மாதிரியை – முழு அளவில் பின்பற்றி வருகிறேன் என்பது எனக்கு மனநிறைவு தரும் அனுபவம்.

இந்த நாடாளுமன்றச் சிக்கலை ஆசிரியர் சமாளித்துக் கையாண்டு விட்டார் என்ற தகவலை மட்டும் செய்தி ஆசிரியர் மாலையில் கூறினார். எப்படி என்று கூறவில்லை. ஆனால் முன்னிரவில் மாகாண பதிப்பு இதழின் முதல் பிரதிகள் ஆசிரியர் பீடத்துக்கு வந்த போதுதான் நிலைமை விளங்கியது. எனக்கும் போன உயிர் திரும்பியது. பிரச்சினையின் நீள, அகலமும் அப்போதுதான் எனக்குப் புரிந்தது.

உயர்நீதிமன்ற தீர்ப்பு தொடர்பாக தினபதி முதல்நாள் வெளியிட்ட செய்தி உறுதிப்படுத்தப்பட்டது என்பதே அடுத்த நாள் தலைப்புச் செய்தியாக இருந்தது என ஞாபகம். அடுத்து, 'தினபதியின் செய்திக்கு சரத்தின் ஆட்சேபனையும் பிரதமரின் பதிலடியும்' என்ற செய்தி இருவரினதும் படங்களுடன் வெளியாகியிருந்தது. அதை வாசித்ததும் விடயம் விளங்கியது.

அப்போது எதிரணியில் சீற்றத்துடன் பேசும் எம்.பியாக கம்யூனிஸ்ட் கட்சியின் சரத் முத்தெட்டுவேகம இருந்தார். அவர் பிரபல சட்டத்தரணியும் அரசியல்வாதியுமான கொல்வின் ஆர் டி சில்வாவின் மகள் மனோரியைத் திருமணம் செய்தவர். அவர் தான் நாடாளுமன்றத்தில் இந்த பிரச்சினையைக் கிளப்பினார்.

"உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை சபாநாயகர் நாடாளுமன்றத்தில் அறிவிக்கும் போதுதான் அது பகிரங்க ஆவணமாகும். அதற்கு முன்னர் அதனை வெளியிடுவது சட்டத்திற்குப் புறம்பானது. நீதிமன்ற நீயாயாதிக்கத்திலும் நாடாளுமன்ற சுயாதிபத்தியத்திலும் தலையிலும் நடவடிக்கை இது." – என்றார் அவர்.

ஆகையால் இவ்விடயம் தொடர்பில் நாடாளுமன்றத் தெரிவுக் குழு அமைத்து விசாரிக்க வேண்டும். இந்த விடயத்தில் நீதிமன்று மற்றும் நாடாளுமன்ற நடவடிக்கைகளில் தலையிட்ட பத்திரிகையின் ஆசிரியரையும் செய்தியாளரையும் நாடாளுமன்றுக்கு அழைத்து விசாரணை செய்ய வேண்டும் என்றார் சரத் முத்தெட்டுவேகம என அச்செய்தி தெரிவித்தது.

அதற்கு சரியான பதிலடியை கொடுத்து பிரதமர் பிரேமதாஸ விடயத்துக்கு முற்றுப்புள்ளி வைத்தார். எப்போது இந்த ஆவணத்தில் உயர் நீதிமன்ற நீதியரசர்கள் ஒப்பமிட்டார்களோ அப்போதே விடயம் முடிவுக்கு வந்துவிட்டது. அது அப்போதே பகிரங்க ஆவணம். சபாநாயகர் அதனை நாடாளுமன்றத்தில் பகிரங்கப்படுத்த முதல் அதனை வெளியிடுவதற்கு நுட்பமான, திறமையான செய்தியாளர்கள் தேவை. பாவம் சரத் முத்தெட்டுவேகமவின் கம்யூனிஸ்ட் கட்சி பத்திரிகையான 'அத்த'வில் அத்தகைய திறமையான செய்தியாளர்கள் இல்லை. அதற்காக இப்படி புலனாய்வு செய்து, செய்திகளை முன்கூட்டியே வழங்கும் திறமையான செய்தியாளர்களை நாங்கள் நாடாளுமன்றுக்கு அழைத்து அவமானப்படுத்தக் கூடாது. மாறாக பாராட்ட வேண்டும் என்று கூறி விவகாரத்துக்கு முற்றுப்புள்ளி வைத்தார் பிரதமர் எனவும் அச்செய்தி தெரிவித்ததாக எனக்கு ஞாபகம்.

எங்களின் தினபதி அலுவலகம் கொழும்பு வாழைத்தோட்டத்திற்கு அருகே பிரதமர் பிரேமதாஸவின் வீட்டிலிருந்து கூப்பிடு தொலைவில் இருந்தது, எங்கள் அலுவலகத்தில் பிரதமர் பிரேமதாஸவை சில சமயங்களில் நான் கண்டிருக்கிறேன். ஆகவே அவருக்கும் எங்கள் ஆசிரியருக்கும் இடையில் ஊடாட்டம் இருந்தது என்பது எனக்கு தெரியும். எனவே என் செய்தி சம்பந்தமான விடயம் பிரச்சினையானதும் பிரதமர் மூலமே அதை சமாளித்து சரி பண்ணி இருக்கிறார் ஆசிரியர் என்பது எனக்கு விளங்கியது.

ஆனாலும் அவரிடம் அன்று படித்த பாடம், ஒரு பத்திரிகை ஆசிரியனின் பணி பற்றிய முறையான அறிவுரையை எனக்குத் தந்தது என்பது மட்டும் மறக்க முடியாத உண்மை.


(வளரும்)

# இடர்கால சுயகற்றல் மீட்டல் பயிற்சி - 2021


தரம் - 09 | கணிதம் | அலகு 16

## முக்கோணியின் கோணங்கள்

ஒரு நேர்கோட்டின் மீது இன்னொரு நேர்கோடு நிற்பதால் உண்டாகும் அடுத்துள்ள கோணங்களின் கூட்டுத்தொகை இரண்டு செங்கோணங்கள் ஆகும்.





$A^0 + B^0 + C^0 = 180^0$





**01. பயிற்சி**


01.





03.





02.




04.





ஒரு புள்ளியை சுற்றியுள்ள கோணங்களின் கூட்டுத்தொகை 3600 ஆகும்.
X இன் பெறுமானம் காண்க.





01. $X + 150^0 + 115^0 = 360^0$

$X = 360^0 - 265^0$


$X = 95^0$





02. X = ..............................





03. X = ..................................





04. X = ..............................




05. X = ............................





06. X = ..............................





07. X = ..............................

இரண்டுநேர்கோடுகள் ஒன்றை ஒன்று இடைவெட்டும்போது உண்டாகும் குத்தெதிர்க் கோணங்கள் ஒன்றிற்கொன்று சமனாகும்





X = .................. (....................)
Y = .................. (....................)
Z = .................. (....................)





2z – 10 = .......................
z = ............( ..........................)

இரு சமாந்தர நேர்கோடுகளை ஒரு கோடு இடைவெட்டும் போது உண்டாகும்


1. ஒத்த கோணங்கள் சமனாகும்
2. ஒன்றுவிட்டகோணங்கள் சமனாகும்
3. நேயக்கோணங்களின் கூட்டுத்தொகை இரண்டு செங்கோணங்கள் ஆகும்





01. a = .................
b = .................
c = .................
d = .................
e = .................
f = .................
g = .................





02. P = ..............
q = ..............
r = ...............




03. X = ...............




04. 2x+3x =...... (......... )
.......x = ..............
x = .........................




05. x + 50 = 3x -10 (.............)
..........................................
..........................................

ஆக்கம் - தாமினா சுபாகரன்
கட்டுறுப்பயில்வு மாணவ ஆசிரியை (யாழ்/ செங்குந்த இந்துக் கல்லூரி)
யாழ்/ தேசிய கல்வியியற் கல்லூரி.

வழிகாட்டலும் ஆலோசணையும் - திரு. ஞானமணி இரத்தினசிங்கம்
ஓய்வுநிலை விரிவுரையாளர், யாழ்/ தேசிய கல்வியியற் கல்லூரி.

# இடர்கால சுயகற்றல் மீட்டல் பயிற்சி - 2021

தரம் - 08 | கணிதம் | அலகு - 19

## தொடைகள் - விடைகள்

**01. பயிற்சி**

01. B = {2, 4, 6, 8,10 }
i) 5 $\notin$ B
ii) 2 $\in$ B
iii) 7 $\notin$ B
iv) 4 $\in$ B
v) 9 $\notin$ B
vi) 8 $\in$ B

02. 13 $\in$ {முதன்மை எண்கள்}
03. 8 $\notin$ {சதுர எண்கள்}
04. U $\in$ {ஆங்கில உயிரெழுத்துக்கள்}
05. கரட் $\notin$ {பழுங்கள்}

**02. பயிற்சி**

1) D = { } / D = $\emptyset$
(2) F = {7} , n (F) = 1
(3) G = {0} , n (F) = 1
(4) X = { }, X = $\emptyset$
(5) Y = { } , y = $\emptyset$

**03. பயிற்சி**

(1) n {A} = 7
(2) n (X) = 3
(3) n (Z) = 9
(4) n (P) = 0
(5) n (S) = 1
(6) n (B) = 0
(7) n (y) = 9
(8) n (m) = -6

ஆக்கம் - தாமினா சுபாகரன்
கட்டுறுப்பயில்வு மாணவ ஆசிரியை (யாழ்/ செங்குந்த இந்துக் கல்லூரி)
யாழ்/ தேசிய கல்வியியற் கல்லூரி.
வழிகாட்டலும் ஆலோசணையும் - திரு. ஞானமணி இரத்தினசிங்கம்
ஓய்வுநிலை விரிவுரையாளர், யாழ்/ தேசிய கல்வியியற் கல்லூரி.

இந்த வாரம் இவர்



ஆக்கம்: ப்ரியமதா பயஸ்

# கிழக்கு மண் தந்த விரிவுரையாளர், எழுத்தாளர்

# திமிலைத்துமிலன்

கிழக்கிலங்கையின் மூத்த எழுத்தாளர்களுள் ஒருவரான திமிலைத்துமிலன் தனது இயற்பெயரால் அறியப்பட்டதைவிட திமிலைத்துமிலன் எனும் அடைமொழிப் பெயருடன் தான் அதிகம் தமிழ் இலக்கியப்பரப்பில் நன்கு அறியப்பட்டவர்.

திமிலைத்துமிலன் என அழைக்கப்பட்ட சின்னயா கிருஷ்ணபிள்ளை ஈழத்துத் தமிழ் எழுத்தாளர். மூத்த கவிஞர். சிறந்த சிறுகதை, புதின எழுத்தாளர், ஓவியர், ஆய்வாளர், நாடகாசிரியர். இவர் மட்டக்களப்பு ஆசிரிய கலாசாலையில் பயிற்சி பெற்றுப் பட்டம் பெற்று அங்கேயே நீண்ட காலம் விரிவுரையாளராகக் கடமையாற்றி ஓய்வுபெற்றவர். இதுவரை 15 நூல்களை வெளியிட்டுள்ளார்.

இலங்கையில் மட்டக்களப்பில் திமிலைத்தீவில் பிறந்தவர். இவர் காலஞ்சென்ற கவிஞர்களான திமிலை மகாலிங்கம், திமிலைக் கண்ணன் ஆகியோரின் சகோதரர். திமிலைத் துமிலன் திமிலைத்தீவு புதூர் அரசினல் பள்ளிக்கூடத்தில் ஆசிரியராகப் பணியாற்றியவர்.


கிழக்குமண் கவிதைக்கும் எழுத்துக்கும் தன்னகத்தே சில சிறப்பியல்புகளை கொண்ட மண் - அந்தவகையில் மண் வாசம் வீசும் எழுத்துக்களை தந்த எழுத்தாளர்கள் பட்டியலில் திமிலை துமிலனுக்கு முன்னுரிமைதான் .காலம்காலமாக மண் வாசத்துடன் போற்றப்படும் இலக்கியங்கள் கிழக்குமண்ணில் எழுந்தன காலப்போக்கில் கிழக்குமண்ணின் எழுத்துத் துறை தன் இயல்பில் இருந்து குறைந்துபோனமை வருந்தத் தக்கது .

இலங்கையில் கிழக்குமண் தனிப்பெரும் குடிமண் - வாழ்வியலை அழகாக வாழும் கிராமத்து மணம் வீசும் வாழ்வியலை கொண்ட மண் ஆகையால் இங்கே எழுந்த எழுத்துக்களும் அத்தகைய மண் வாசம் கொண்டவையாக பரிணமித்தமை ஆச்சரியப்படும் விடயம் அல்ல .

கிழக்கு மண்ணின் பெரும் எழுத்து பொக்கிமாக விளங்கும் திமிலைத்துமிலன் பெயருக்கு ஏற்றால் போல் வித்தியாசமான மொழிநடைகொண்ட எழுத்துக்களை தந்தவர் .

இவரது கவித் திறனுக்காக இவர் பல பட்டங்களையும், விருதுகளையும் பெற்றுள்ளார். கவிமணி, கவியரசு, தமிழ் ஒளி, கவிதல பாஸ்கரன், கலாபூணம் ஆளுநர் விருது, கலைக்கழக விருது என்பன அவற்றுட் சிலவாகும். இவரது 'வழி தவறியவள்' என்ற கவிதை சென்னைக் குழந்தை எழுத்தாளர் சங்கம் 1959 இல் நடத்திய குழந்தைக் கவிதைப் போட்டியில் முதற் பரிசு பெற்றது.

ஆனந்த விகடன் நடத்திய கவிதைப் போட்டியில் முதற் பரிசு பெற்றுள்ளார். இலங்கையில் நடைபெற்ற பல கவிதைப் போட்டிகளில் பல பரிசுகளைப் பெற்றுள்ளார். இவரது கவித்துறை ஆற்றலுக்காக 2009 இல் கிழக்குப் பல்கலைக்கழகம் இவருக்கு இலக்கிய கலாநிதிப் பட்டம் வழங்கிக் கௌரவித்தது. கனேடியத் தமிழ் எழுத்தாளர் ஒன்றியம் 2009 நவம்பர் 9 இல் நிகழ்த்திய இவரது பவள விழாவிலே இவருக்கு செந்தமிழ்க் கவிமாமணி பட்டம் வழங்கிக் கௌரவித்தது.



இவர் ஈழத்துச் சஞ்சிகைகள் பலவற்றில் 'கிருஷ்ணா' என்ற பெயரில் எண்ணற்ற ஓவியங்களை வரைந்துள்ளார். வீரகேசரியில் 1950களில் 'தாரா என் தங்கை' என்ற கவிதைச் சித்திரத் தொடர்கதையை வரைந்துள்ளார். கண்ணாடியில் இவர் வரைந்த ஓவியங்களைக் கொண்ட கண்காட்சி ஒன்று மட்டக்களப்பு ஆசிரிய கலாசாலையில் நடைபெற்றது.

**இவரது வெளிவந்த நூல்களாக**

**நீரர மகளிர்து, கொய்யாக்கனிகள், நெஞ்சம் மலராதோ?, அழகுமுல்லை, மஞ்சுநீ மழைமுகில் அல்ல, எல்லம் எங்கள் தாயகம், முத்தொள்ளாயிரம், அணில்வால், யாப்பும் அணியும், தமிழ் இலக்கியம் கற்பித்தல், திமிலைத்துமிலன் கவிதைகள் - காதல், திமிலைத்துமிலன் கவிதைகள் - சமூகம், பாவலர் ஆகலாம், கருமணியிற் பாவாய், ஈழத்துக் கல்வி மரபில் எண்ணெய்ச் சிந்து**- போன்ற பதினைந்து நூல்கள் வரலாற்றில் இடம்பிடித்துள்ளன .

பழந்தமிழ் இலக்கிய மரபில் இலங்கை 'ஈழம் என்றே குறிக்கப்பட்டு வருகின்றது. 'ஈழ மண்டல நாடெங்கள் நாடே என்று பேசப்பட்டு வந்திருக்கின்றது, ஈழத்தமிழிலக்கியத்தின் சமூக அடிப்படை, இலங்கையில் வாழ்ந்து வருகின்ற தமிழ்ப் பேசும் மக்கள் திரளின் வாழ்க்கை அமைப்பேயாகும். அத்திரளில் மூன்று முக்கிய பிரிவுகள் உள்ளன. அகமொழி, சமயப்பண்பாடு, சமூக அமைப்புமுறை என்பவற்றின் அடிப்படையிலே இம் மூன்று பிரிவினரும் அமைகின்றார்கள். ஒன்று இங்கு வரலாற்றுக் காலம் முதல் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வருகின்ற தமிழர்கள். இவர்கள் இலங்கையின் வட, கிழக்குப் பகுதியிலே பெரும்பான்மையினராக வாழ்கின்றனர். இரண்டு இலங்கையின் வடக்கு, கிழக்கு தெற்கு, மத்திய பகுதிகளிலே தலைமுறை தலை முறைகளாக வாழ்ந்து வருகின்ற இஸ்லாமிய சமயத்தினருடன் இணைந்து வாழும் கிழக்குவாழ் தமிழர்களின் வாழ்வியல் போக்கும் ஏனைய பகுதி தமிழர்களின் வாழ்வியல் போக்கில் இருந்து வேறுபட்டது .

இங்கே வாழும் தமிழ் எழுத்தாளர்களின் எழுத்தும் ஒற்றுமைகலந்த எழுத்துக்களாகவே புலப்படுவது அழகிய வாழ்வியலாகும்.

தமிழ் இலக்கியக் கல்வி, இலக்கிய பாரம்பரியம் என்பனவற்றின் ஈழத்தின் தனித்துவத்தை நிலை நிறுத்துவதில் எழுத்தாளர்கள் பங்களிப்பு உன்னதமானது.

ஈழத்திலே உருவாக்கப்படுகின்ற தமிழ் இலக்கியம் ஈழத்துமக்களின் வாழ்க்கைப் பிரச்சினைகளை அடிப்படையாக வைக்கவேண்டுமென்ற கருத்தோடு இந்த "மண்வாசனை", மற்றும் "ஈழத்திலக்கியம்" என்னும் வரையறைகளோடு இன்றுவரை நிலைத்திருக்கும் எழுத்துக்களை தந்தவர் கிழக்கிலங்கையின் சிறந்த எழுத்தாளர் திமிலைத்துமிலன்.

---

# கொழும்புத் துறைமுகத்துக்கு அருகில் பேர்ள் கப்பல் எண்ணெய்க்கசிவு உண்டு

## சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் கருத்து

கொழும்பு துறைமுகத்திற்கு அருகில் தீவிபத்திற்கு உள்ளான எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலில் எண்ணெய்க் கசிவு இருப்பதாக சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர்.

சுற்றுச்சூழல் நீதி மையத்தின் நிர்வாக இயக்குநர் ஹேமந்த விதானகே இதனைத் தெரிவித்துள்ளார். கொழும்பில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் இதனை கூறியுள்ளார். தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் -

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்தை தொடர்ந்து 275 இற்கும் மேற்பட்ட கடல் ஆமைகள் இறந்துவிட்டன எனக் கூறப்படுகிறது, எனினும், கடல் ஆமை இறப்புகளின் உண்மையான எண்ணிக்கை கூடுதலாக இருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.

கூடுதலாக, சுமார் 45 டொல்பின்களும் இறந்துவிட்டன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

கடலில் இரசாயன மாசு இருப்பதன் காரணமாக கடல் வாழ் உயிரினங்கள் உயிரிழக்கின்றன. உள்ளூர் கல்வியியலாளர்கள் இந்தப் பிரச்சினைக்கான காரணங்களை வழங்கத் தவறிவிட்டனர். எண்ணெய்க் கசிவு காரணமாக அதிகமான மீன்கள் உயிரிழக்க கூடும் எனவும் இதனால் மீனவர்களின் வாழ்வாதாரங்கள் பாதிக்கப்படுகின்றன எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கிடைத்த தகவல்களின்படி, கடல் மட்டத்திலிருந்து சுமார் 02 முதல் 03 மீற்றர் தொலைவில் உள்ள ஒரு காற்று துவாரத்திலிருந்து எண்ணெய் வெளியேறுகிறது. இதனைத் தடுக்க முடியும்.

எனினும், பிரச்சினையைத் தீர்க்க கடினமான காலம் முடியும் வரை அரசாங்கம் காத்திருக்கிறது.

நாங்கள் நீண்ட நேரம் காத்திருக்க முடியாது, எண்ணெய்க் கசிவை தடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நாங்கள் கோருகிறோம்,' - என்று அவர் வலியுறுத்தினார்.

---

# விபத்துக்குள்ளானார் அமைச்சர் தயாசிறி



ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின்பொதுச் செயலாளரும், இராஜாங்க அமைச்சருமான தயாசிறி ஜயசேகர விபத்துக்குள்ளாகியுள்ளார்.

அவர் நேற்று முன்தினம் காலை வழமை போல் கொழும்பு பிரிஜட் மடத்திற்கு அருகே சைக்கிளில் சென்றபோது மோட்டார் சைக்கிள் மோதியுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இந்த சந்தர்ப்பத்தில் சிறுகாயத்துக்கு உள்ளாகிய அவர் வைத்தியசாலைக்குச் சென்று வீடு திரும்பினார் என அறியமுடிகிறது.



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங் காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். ‘இனப்படுகொலை’, ‘இனச்சுத்திகரிப்பு’ ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

- செல்லத்துரை ரவீந்திரன் -

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

அங்கம் 75

**233. அந்த மாவீரர் உரையில் என்ன சொல்லப்பட்டது?**

சிங்கள அரசாங்கத்தின் தொடர்ந்த நடவடிக்கைகளாலேயே, தமிழ் மக்கள் போராடும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். கடந்த மூன்று அரசாங்கங்களும், பேச்சு வார்த்தைகள் என நடத்திய கபட நாடகங்களினாலும் அவர்களது மாறாத நிலைப்பாடுகளினாலும் நாம் பெரும் விரக்திக்கு ஆளாகியிருக்கிறோம். மஹிந்த ராஜபக்ஷ ஒரு பக்கத்தில் போரை முடுக்கிவிட்டபடி, அதேசமயத்தில் விடுதலைப் புலிகளோடு சமாதானம் தேடுகிறார். இப்படியான நடவடிக்கைகளாலும், இரட்டை வேடங்களினாலும் 2002இல் ஏற்றுக் கொள்ளப்பட்ட போர் நிறுத்த உடன்படிக்கை செயலிழந்து போனது. இந்த சிங்கள மக்களின் பேரான்மை திமிர் தமிழ் மக்களை சுதந்திரமான தமிழ் ஈழம் என்று அமைப்பதை தவிர வேறு மார்க்கத்தைத் தரவில்லை என்பதே நிலைமை.

போர் நிறுத்த ஒப்பந்தம் செயலிழந்தது என்பதும் சுதந்திர தமிழ் ஈழம் என்பதும் முன் வந்து நிலைமைகளை மாற்றியது.

அதனை கேள்வியுற்ற மஹிந்த ராஜபக்ஷ பிரபாகரன் இதைத்தான் பலகாலம் சொல்லி வருகிறார். ஆனால் நான் நேரடிப் பேச்சுக்கு மற்றவர்கள் உள்ளிடாமல் அழைக்கிறேன். ஆனால் வருவதில்லை என ஊடகங்களுக்குத் தெரிவித்தார். என்ன செய்தால் அப்படியான பேச்சுக்கு பிரபாகரன் வருவார் என கேட்கப்பட்டபோது, “எனக்குத் தெரியாது. ஆனால் நான் நேரடியாகவே பேசுவேன். ஆகவே பேசுவோம். நான் எப்போதும் அவருக்கு மற்றவர்களை விட்டு விட்டு, நேரடியாகப் பேசவரும்படி செய்திகள் தெரிவித்தேன். ஆனால் வரவில்லை. அவரை இப்படி அழைப்பதால் எனக்கு எனது கட்சியிலுள்ளவர்களாலேயே பாதகங்கள் வரும். ஆனால் அவற்றையும் அறிந்துதான் பேச்சுக்கு கூப்பிடுகிறேன் என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் நாட்டின் பிரதமரும் மற்றவர்களுமோ, பயங்கரவாதம் தொடர்கிறது, ஆனாலும் நாம் பேசுவோம், பிரபாகரனது பேச்சில்தான் கபடமும் இரட்டை வேடமும் உண்டு, காட்டிலுள்ள ஒரு பயங்கரவாதியின் பேச்சுகளுக்கு நாம் அளவுக்கு மீறி மதிப்பு கொடுக்கத் தேவை



பலாலித் தளத்தில் இந்தியத் தளபதிகளுடன் பிரபாவும் பாலாவும்

யில்லை என்றும் தெரிவித்தனர்.

இவற்றால் முறிந்த பேச்சுவார்த்தைகளை மீளத் தொடருவதற்காக, நோர்வேயின் பிரதிநிதி ஜொன் ஹன்சன் பாவர் நவம்பர் 30ஆம் திகதி கொழும்பு வந்து சேர்ந்தார்.

**234.பேச்சு வார்த்தைகளை மேற்தொடர சந்தர்ப்பங்கள் இருந்தனவா?**

மஹிந்தா ஜெனிவாவில் நடந்த பேச்சுவார்த்தைகளில் பயங்கரவாதம் நிறுத்தப்பட்டபின் தான் இனப் பிரச்சினைக்குத் தீர்வு என்பது அவருக்கு கொடுக்கப்பட்ட ஆலோசனைகளின் பின்னணியில் இருந்தன. அவர் பணியில் அமர்த்தியிருந்த சர்வதேச சட்டத்தரணிகளினதும் சமூக ஆய்வாளர்களின் புத்திமதிகளும், ஜே.ஆர். 1986 பகுதிகளில் விரும்பியவாறு அமெரிக்காவை தங்கள் பக்கம் இழுப்பதற்கு ஏற்படுத்திய பொறிமுறைகளும், அந்த நடத்துதலின் வழிமுறைகளில், பயங்கரவாதம் முதலில் முடிக்கப்படவேண்டும் என்பதும் மேசையில் இருந்தன. மேற்கொண்டு நோர்வேயோடு பேசுவதில்லை என்ற தீர்மானம் எடுக்கப்பட்டது.

விடுதலைப் புலிகள், தாங்கள் கேட்ட எல்லா நிபந்தனைகளையும் நிறைவேற்ற வேண்டும் என்ற கோரிக்கைகளில் இல்லாவிட்டாலும், புலம்பெயர் புத்திமதிகளில் இடைக்கால சபை என்ற அடிப்படையிலேயே பேச்சுகளும் கள நிலைவரங்களும் இருக்க வேண்டும் என்று நின்றார்கள்.



ஜேர்மனில் நடந்த பேச்சுகளின்போது யாழ் பத்திரிகைக்குப் பேட்டியளிக்கும் பாலா பின்னணியில் தமிழ் ஜெயா ரி.வி. செய்தியாளர் ரவி பேர்னாட்டும் (இப்போது இந்திய நாடாளுமன்ற மேலவை உறுப்பினர்) ரி.ரி.என். பொறுப்பாளர் சிவாவும்

ஆகவே, இரண்டு பகுதிகளின் துருவ நிலைகளில் நோர்வேயூடாக மேற்கொண்ட பேச்சு வார்த்தைகள் சாத்தியமாகவில்லை.

இடையில் அவர்களது மதியுரைஞர் பாலசிங்கம் 14 டிசெம்பர் 2006 காலமானார்.

**235. பாலசிங்கத்தின் மறைவு விடுதலைப் புலிகளுக்கு ஏதும் தாக்கங்களைத் தந்ததா?**

இந்தக் கேள்விக்கு அபிப்பிராயம் சொல்வது கஷ்டம். ஜெனிவாவின் முதற் சுற்றுப் பேச்சு வார்த்தைகளில் பாலசிங்கம் எடுத்த நிலைப்பாட்டிற்கு பிரபாகரனிடமிருந்தோ மற்றைய விடுதலைப் புலிகளின் புத்திஜீவிகளிடமிருந்தோ ஆதரவு இருக்கவில்லை. ஆகவே அவரால் மேற்கொண்ட பேச்சுவார்த்தைகளை தனது ஆளுமையில் கொண்டு சென்றிருக்க முடியாது.

அவர் புத்திமதிகள் தந்திருக்கலாம் அவ்வளவுதான். அவரது இழப்பை பிரபாகரன் முதல் கொண்டு எல்லா தளபதிகளும் இயக்கத்தின் மற்றையோரும் தங்களது தனித்தனி இழப்பாகக் கருதினார்கள். எல்லோருமே அவர் மேல் அன்பும், பிரிவும் பாசமும் கொண்டவர்கள். அவருக்கு தகுந்த மரியாதைகளுடன் லண்டனில் உணர்ச்சிகரமான இறுதியாத்திரை செய்யப்பட்டது. மறைவின் போது ‘தேசத்தின் குரல்’ என கௌரவிக்கப்பட்டார். அதில் பங்கு பற்றிய சொல் ஹேய்ம், தனது இரங்கலுரையில் இப்படி குறிப்பிட்டார்.

“உலகத்தைப் பற்றி சரிவர தெரிந்து இலங்கையையும் அதில் நடந்த தமிழ் மக்களின் உரிமைப் போரையும் முற்றாகத் தெளிவாக அறிந்திருந்தமை மட்டுமன்றி அவர்களைச் சுற்றி இருந்த நாடுகள் எப்படி இயங்குகின்றன, எந்த விதமான பார்வைகளில் நடக்கின்றன என்பதையும் அறிந்தவர். ஒரு மதியுரைஞருக்கு அது அவசியம். நான் அவரை பார்க்க ஒவ்வொரு கிழமையும், கிட்டிய நாள்களில் லண்டனுக்கு வந்து போனேன். அவர் ஏற்றுக் கொண்ட சுயாட்சி முறையில் பேச்சு வார்த்தைகளை ஸ்ரீலங்கா அரசின் ஊடாக முன்னெடுத்த ஆய்வு அது. அவரின் சுகவீனம் காரணமாக சாத்தியமாகவில்லை.”

- இப்படியான தாக்கங்கள் அவரது மறைவில் இருந்தன.

**236. பாலசிங்கத்தை பற்றிய உங்களது அபிமானம் என்ன?**

இதனை முன்னால் கேட்டபொழுதும், பின்னொரு நாள் பார்க்கலாம் என தவிர்த்தேன். இப்பொழுதும் அந்த எண்ணம் உண்டு. ஏனெனில் இதனை இப்பொழுது விளக்கப்படுத்தி எழுத முனைந்தால், மஹிந்தவின் பயங்கரவாத ஒழிப்பின் முன்னேற்பாடுகள் பின்தள்ளிப்போகும். ஆயினும் முக்கியமானவற்றை சொல்கிறேன்.

பாலசிங்கத்தின் அரசியல் அறிவும், சர்வதேசங்களை பற்றிய பார்வைகளும் இனவிடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட எவரிடமும் இருக்கவில்லை. மேலும் அவர் ஒரு சீரிய சிந்தனையாளர். ஒரு செய்கையின் தாக்கங்களை அறிந்து, சீர்தூக்கிப் பார்க்க கூடியவர். அந்தளவில் சொல்ஹெய்ம் கூறிய கருத்துக்களோடு நான் ஒத்து போகிறேன்.

ஆனால் பாலசிங்கமும் காலம் காலமாக அவர்களின் போக்குகளை நியாயப்படுத்திவிட்டு, ஆயுதப் போராட்டத்தின் மூலம் சர்வதேசத்தையும் எதிர்த்து, விடுதலைப் புலிகள் தங்களை நிலை நிறுத்திக் கொள்ளமாட்டார்கள் என்ற கருத்துக் கணிப்புக்கு வந்து, அதனை பிரபாகரனுக்கு அறிவித்தோ அறிவிக்காமலோ சுயாட்சியே ஏற்றுக் கொண்டு போகலாம் என சர்வதேசத்துக்கு அறிவித்த இடைக்காலம் வரை, தமிழ் மக்கள் பட்ட அவலங்களுக்கும் இழந்தவைகளுக்கும் (அரசியல் ரீதியாக கூட) அவரது பங்கு உண்டு என்ற மனவேதனை எனக்கு உண்டு. அதனைக் கோபம் என்றும் விவரிக்கலாம். திம்புப் பேச்சு வார்த்தைகளில் அவர் நேரடியாகப் பங்கு பற்றவில்லை. ஆனால் விடுதலைப் புலிகளின் பேச்சாளராக இருந்த லோரன்ஸ் திலகருடனும் அன்ரன் சிவ குமாருடன் நேரடி தொடர்பிலிருந்து விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டை அறிவுறுத்திக் கொண்டிருந்தார்.

அதே சமயம் அவர் லண்டனில் வகித்த காலங்களிலிருந்தே இடதுசாரி சித்தாந்தங்களில் ஊறியிருந்த



மறைந்த தேசத்தின் குரலுக்கு அஞ்சலி செலுத்தும் தலைவர் பிரபாகரன்

பத்மநாபா (ஈ.பி.ஆர்.எல்.எவ்.) இரத்தினசபாபதி, சங்கர் ராஜி (ஈரோஸ்) போன்றவர்களுடன் ஈடுபாட்டில் இருந்தவர். தான் சென்னையில் தங்கியிருந்த காலங்களில் இவர்களுடன் உறவாடியவர். அந்த ஈடுபாடுகளால் பத்மநாபா, வரதராஜாபெருமாள், இரத்தினசபாபதி போன்றோருடன் இந்தியா தனித் தமிழ் ஈழத்திற்கு மாற்றாக ஒரு திட்டம் தாருங்கள் என்று கேட்டபொழுது அவர்களுடன் சேர்ந்து திம்புத் தீர்மானத்தில் பங்குபற்றி அதனை முன்வைத்தவர்.

அப்படியானவர் திம்பு தீர்மானத்தில் வந்த இந்திய ஒப்பந்தத்தை பிரபாகரன் ஏற்காததை ஏன் நியாயப்படுத்தினார்? இயக்க மோதல்களை ஏன் தவிர்த்து கொள்ளவில்லை? இந்தியா தமிழ் மக்களுக்கு பக்க பலமாக நின்று வட, கிழக்கை இணைந்து, ஒரு சுயாட்சியை நிறுவ ஆணித்திரமாக நின்று, தனது படைகளையும் அனுப்பி யதை, பிரபாகரன் எதிர்த்தது அல்லது ஆதரவு தராததை அவரது சர்வதேச அறிவு கண்டு கொள்ளவில்லையா? என்ற ஆதங்கம் எனக்கு உண்டு.

இவற்றை நான் துளாவியபோது, “எனக்கு பிரபாகரனின் இராணுவ நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த இயலாது. அது என்னால் முடியாததும் கூட.” என்று சொன்னபோது சிலேடையாக “அப்படியானால் பிரித்தானிய தூதரகத்தில் முன்னர் மொழிபெயர்ப்பு செய்த மாதிரி இங்கும் அதைதான் செய்கிறீரா?” – என்று ஒரு உரிமையில் நாசூக்காவே கேட்டேன். பாலசிங்கம் நகைச்சுவையும் குறும்பும் நிறைந்த பேச்சில் வல்லவர். “அதற்குப் பதிலாக நீ எழுதுவதை நான் மொழிபெயர்க்க மாட்டேன்.” – என்றார் குயுக்தியாக பாலசிங்கம்.

(வளரும்)

# மாகாண மக்களின் தேவைகளை, உணர்வுகளை புரிந்தவராக பிரதம செயலர் நியமிக்கப்பட வேண்டும்

## சமன் பந்துலசேனவுக்கு இந்த அனுபவம் கிடையாது என்கிறார் வட மாகாண அவைத் தலைவர் சி.வி.கே.



மாகாணத்தின் மக்களுடைய உணர்வுகளைப் புரிந்து கொள்ளக்கூடிய - தேவைகளைப் புரிந்துகொள்ளக்கூடிய - அந்த மக்களுடைய வாழ்வியலைப் புரிந்து கொள்ளக்கூடிய - ஒருவரே மாகாணத்தினுடைய பிரதம நிர்வாகியாக, பிரதம செயலாளராக நியமிப்பதற்கு சிபார்சு செய்ய ஜனாதிபதிக்கு இந்த உரித்து வழங்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த நியமனத்துக்குரியவர் எவராக இருந்தாலும் அந்த மாகாண மக்களுடைய உணர்வுகளை, தேவைகளைத் தெரிந்தவராக - புரிந்தவராக - அனுபவம் கொண்டவராக - இருத்தல் வேண்டும். இந்த புரிதல் அனுபவம் சமன் பந்துலசேனவுக்குக்கிடையாது. என்னுடைய கருத்துக்கள் தனி நபர் சமன் பந்துல சேனாவுக்கு எதிரானது அல்ல. இது எங்களுடைய மாகாணம் சார்ந்தது.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் வடக்கு மாகாணசபை அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம்.

அவரது அலுவலகத்தில் அவர் நடத்திய ஊடக சந்திப்பில் மேலும் தெரிவித்தவை வருமாறு -

முதலாவது சட்ட ரீதியாக பார்க்கின்ற பொழுது மாகாண சபைகள் சட்டத்தின்படி பிரதம செயலாளரை அந்த மாகாணத்தினுடைய முதலமைச்சரின் உடன்பாட்டோடு தான் ஜனாதிபதி நியமிப்பார். அதேநேரம் முதலமைச்சரின் உடன்பாடு இல்லாமல் ஆளுநரை அவர் நியமிக்கலாம். ஜனாதிபதிக்கு இந்த இரண்டு நியமனங்களும் நியமிப்பதற்கு அதிகாரம் உண்டு. இந்த வகையிலே இப்பொழுது சபை இல்லாத நிலையிலே முதலமைச்சருடைய அதிகாரங்கள் ஆளுநருக்கு உள்ளன. அந்த வகையிலே ஆளுநருடன் அவ்வாறானதொரு கலந்துரையாடல் நடைபெற்றதா அல்லது அவருடைய இணைக்கப்பாடு வழங்கப்பட்டதா என்பது தெரியவில்லை. எவ்வாறாயினும் ஆளுநரும் ஜனாதிபதியால் நியமிக்கப்படுவதால் அவரும் அரசாங்கத்தினுடைய முடிவை விமர்சிக்கக்கூடிய நிலையில் இல்லைஎன்றுதான்நான்நினைக்கின்றேன்.

இந்த சட்டத்திலே இருக்கக்கூடிய முக்கியமானஏற்பாடுஎன்னவென்றால்முதலமைச்சரோடு கலந்து பேசி அவருடைய இணக்கப்பாட்டோடு நியமனம் செய்ய வேண்டும். ஒரு முதலமைச்சர் அந்த மாகாணத்தின் தேவைகளை உணர்ந்து மாகாணத்துக்குப் பொருத்தமான ஒருவரை சிபார்சு செய்கின்ற உரிமை அவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஆகவே, இந்த மாகாணத்தின் மக்களுடைய உணர்வுகளைப் புரிந்து கொள்ளக்கூடிய - தேவைகளைப் புரிந்துகொள்ளக்கூடிய - அந்த மக்களுடைய வாழ்வியலைப் புரிந்து கொள்ளக்கூடிய - ஒருவரே மாகாணத்தினுடைய பிரதம நிர்வாகியாக, பிரதம செயலாளராக நியமிப்பதற்கு சிபார்சு செய்ய அவருக்கு இந்த உரித்து வழங்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த நியமனத்துக்குரியவர் எவராக இருந்தாலும் அந்த மாகாண மக்களுடைய உணர்வுகளை, தேவைகளைத் தெரிந்தவராக - புரிந்தவராக - அனுபவம் கொண்டவராக - இருத்தல் வேண்டும்.

இந்த வகையிலே சமன் பந்துல சேனாவுக்கு அவ்வாறான அனுபவம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. வடக்கு மாகாணம் யுத்தத்தாலே பாதிக்கப்பட்டு, இழப்புக்களை, அழிவுகளைச்சந்தித்து புனர்வாழ்வு அழிக்கப்பட வேண்டிய ஒரு மாகாணமாக இருக்கின்றது. அவ்வாறானதொரு நிலையிலேயே அந்த மக்களுடைய அதிலும்குறிப்பாகவாழ்வாதாரத்தைத்தொலைத்து விட்டு இருக்கின்ற மக்களுடைய உணர்வுகளை, அவர்களுடைய தேவைகளை அனுபவ ரீதியாகப் புரிந்துகொண்டவராக சமன் பந்துல சேனவை நாங்கள் பார்க்கவில்லை.

இரண்டாவது, மாகாண நிர்வாகக் கட்டமைப்பைப் புரிந்தவராகவும் நான் அவரைப் பார்க்கவில்லை. ஏனென்றால் ஒரு மாகாண நிர்வாகமுறைமைக்குள்ளே அவர் இதுவரை காலமும் இருந்தார் என எனக்குத் தெரியவில்லை.

ஆகவே, அவருக்கு மொழிப் பிரச்சினை இருக்கும். ஆனால் இலங்கையில் இருக்கக்கூடிய நாடாளாவிய சேவையில் இருக்கிற யாரும் எங்கேயும் சேவையில் இருக்கலாம் என்பதை நான் தெரிந்து கொண்டுள்ளேன். இங்கே இருக்கக்கூடிய இன்னுமொரு பிரச்சினை அனுபவம் வாய்ந்த பல அதிகாரிகள் வடக்கு மாகாணத்திலே இருக்கின்றார்கள். அவர்கள் எங்களுடைய மக்களின் தேவைகளைப் புரிந்து கொண்டவர்கள். அவர்கள் அத்தனை பேரையும் புறந்தள்ளி, இந்த நியமனத்தைச் செய்தமை ஒரு வகையிலே எங்களுடைய மாகாணத்தை மேலும் புறக்கணிப்பதான ஒரு செயற்பாடாகவே நான் பார்க்கின்றேன். அதிலும் குறிப்பாக அதே தரத்திலும், அதிலும் பார்க்க மேல் தரத்தில், அனுபவத்தில், சிரேஷ்ட தன்மையில் இருக்கக்கூடிய எங்களுடைய தமிழ் உத்தியோகத்தர்களை நிராகரிப்பதன் மூலம் மன உளைச்சலை இங்குள்ள தமிழ் உயர் அதிகாரிகளின் மத்தியில் ஏற்படுத்தும் என்பது தவிர்க்க முடியாதது. இது என்னுடைய சொந்த அனுபவத்திலேயே நான் பார்க்கின்றேன்.

1972 ஆம் ஆண்டில் இருந்து 1975 ஆண்டுவரை நான் தொடர்ச்சியாக மாநகர சபை ஆணையாளர் பதவிக்கு நிராகரிக்கப்பட்டு, எனக்கு கீழ் கனிஷ்ட தரத்தில் இருக்கின்றவர்கள் நியமிக்கப்படும் போது நான் பல தடவைகள் மன உளைச்சலுக்கு உள்ளானமையை அனுபவித்திருக்கின்றேன். ஆகவே, அதேநிலை இங்கு இருக்கின்ற அதிகாரிகளுக்கு ஏற்படும். ஆகவே அவர்கள் முழுமையாக, வெளிப்படையாக இல்லாது விட்டாலும்மானசிகமாகமுழுஒத்துழைப்பை வழங்கக்கூடிய வாய்ப்புக்கள் குறைவு. ஆகவே, இனி வரக்கூடிய மாகாண சபையினுடைய வினைத்திறன் பாதிக்கப்படப் போகின்றது. எல்லாவகையிலும் இந்த மாகாணம்முழுமையாகப்பாதிக்கப்படுகின்ற நிலைமை இதனால் உருவாகும். இது ஒரு கோட்பாடு ரீதியான வெளிப்பாடு.

மேலும்ஒன்றைசொல்லவிரும்புகிறேன். ஜனாதிபதி 2019 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 18 ஆம் திகதி அநுராதபுரத்தில் பதவியேற்ற போது, தான் முழு நாட்டுக்கான ஜனாதிபதி என்றும் 'எனக்கு வாக்களித்தவர்களுக்கு மட்டுமல்ல எல்லாருக்கும் நான் தான் ஜனாதிபதி' என்றார். ஆகவே எங்களுக்கும், இந்த மாகாணத்துக்கும் கூட மதிப்பார்ந்த கோட்டாபய ராஜபக்ஷதான் ஜனாதிபதி. அவ்வாறான நிலையிலே எங்களுடைய உணர்வுகளை, தேவைகளை உய்த்தறிந்து ஒரு நியமனத்தைச் செய்வது அவருடைய நியாயமான கடப்பாடாக இருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு ஜனாதிபதி எங்களுடைய, பல பேருடைய மன உளைச்சலையும், ஏமாற்றத்தையும் அதிர்ச்சியையும் அளிக்கின்ற நியமனத்தை மேற்கொண்டமை எங்களுடைய மக்களுக்கு அதிருப்தியை அளிக்கக்கூடிய ஒன்றாக இருக்கின்றது.

### பிரதம செயலர் நியமனம் மீளாய்வு செய்யவேண்டும்

இப்பொழுதும் காலம் கடந்து விடவில்லை. ஜனாதிபதி இந்த நியமனத்தை மீளாய்வு செய்து பொருத்தமானவர்கள் தமிழர்களில் இன்றைக்கும் அரசாங்கத்துக்கு ஆதரவு அளிக்கின்றவர்கள் எல்லா இடத்திலும் இருக்கின்றார்கள். அரசியலிலும் இருக்கின்றார்கள், அதிகாரிகளும் இருக்கின்றார்கள். அவ்வாறான ஒருவரைத் தேடி நியமிப்பதில் எந்தப் பிரச்சினையும் இல்லை. அவ்வாறுதான் ஆளுநரை நியமித்தார்கள். அதேமாதிரி பிரதம செயலாளரை நியமிப்பதில் என்ன பிரச்சினை இருக்கின்றது. ஜனாதிபதிகுறிப்பாகஇதுவரைகாலமும்ஆளுநராக சிங்களவர் நியமிக்கப்பட்டு வந்த நிலையை மாற்றி தமிழர் ஒருவரை ஆளுநராக நியமித்தமை போன்று இப்போதும் கூட இந்த மாதிரியான மாற்றத்தைச் செய்யலாம். செய்ய வேண்டும். அதற்கான வாய்ப்பு இருக்கின்றது. இன்றைக்கு இன்னும் மாகாண சபையில் ஒரு பொறுப்பிலே இருக்கின்றவன் என்றவகையிலே, பதவியில் இருக்கின்றவன் என்ற வகையில் இதை நான் தெரிவித்து மதிப்பார்ந்த ஜனாதிபதியை கோருகின்ற பொறுப்பு எனக்கு இருக்கின்றது. அந்தப் பொறுப்பின் அடிப்படையில் ஜனாதிபதியை மிகவிநயமாகநான்கேட்டுக்கொள்கின்றேன். தயவுசெய்து இந்த நியமனத்தை எங்கள் நலன் சார்ந்து - மாகாண நலன் சார்ந்து- மாகாண மக்கள் நலன் சார்ந்து - அதனை மீளாய்வு செய்து பொருத்தமான - அவர்கள் விரும்பிய - அதாவது ஜனாதிபதி எவ்வாறு ஆளுநரைத் தெரிவு செய்தாரோ அதேவகையிலே தெரிவுசெய்து நியமனம் செய்ய வேண்டும் என்று மிக அன்போடு கேட்டுக் கொள்கின்றேன்.

மேலும் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும் போது அவர் தெரிவித்தவை வருமாறு: -

### அனைத்துக் கட்சிகளின் கூட்டத்துக்கு மாவை சொல்லாமல் நான் போகேன்!

**கேள்வி:** அண்மையில்நடந்தஅனைத்து ஒற்றுமை கட்சிக் கூட்டத்தில் தமிழரசுக் கட்சி கலந்துகொள்ளவில்லை என்றும் குறிப்பாக தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவுக்கு அழைப்பு விடுக்கப்பட்ட போது அவர் சீ.வீ.கே.சிவஞானம் கலந்துகொள்வார் என்று தெரிவித்தார் எனவும் நீங்கள் கூட்டம் முடியும் மட்டும் இந்தா வருகிறேன் அந்தா வருகிறேன் எனத் தெரிவித்து வராமல் தவிர்த்துவிட்டீர்கள் என்றும் குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகின்றது. இதற்கு என்ன கூறுகிறீர்கள்?

**பதில்:** இதில் இரண்டு விடயங்கள் உள்ளன. முக்கியமாக 3 கட்சிகளின் தலைவர்கள் முதலில் சந்தித்துப் பேசினார்கள். ஒரு சந்திப்பிலே நானும் கலந்துகொண்டேன். அதில் ஏற்கனவே தொடர்ந்து நடைபெற்ற 10 கட்சிகளின் கூட்டங்களின் நிலைவரத்தைத் தெரிவித்துவிட்டு நான் அந்தக் கட்சிக் கூட்டத்திலிருந்து வெளியேறிவிட்டேன். பின்னர் அந்தத் தொடர்புகளிலே கட்சித் தலைவர்தான் இருந்து கொண்டிருந்தார். கூட்டம் சனிக்கிழமை நடைபெறுவதற்கு முன் வெள்ளிக்கிழமை காலையில் கூட இந்த முயற்சி சம்பந்தமாக மாவை சேனாதிராசாவும் நானும் பேசியிருந்தோம். ஆனால் சனிக்கிழமை இவ்வாறான ஒரு கூட்டம் நடைபெறுவதாக அவர் எனக்குச் சொல்லவில்லை. அந்தக் கூட்ட நடவடிக்கைகள் தொடர்பான கருத்துக்கள் எங்களிடையே பரிமாறியிருந்தாலும் கூட இந்தக் கூட்டம் நடைபெறுவதாக அவர் எனக்குச் சொல்லவில்லை. ஆனால் வெள்ளிகிழமை இரவு 8 மணியளவில் ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன் தொலைபேசியில் நாளைய தினம் முன்னாள் முதலமைச்சரின் இல்லத்தில் கூட்டம் நடைபெறும் எனத் தெரிவித்தார். அப்போது நான் உடனடியாக சொன்னேன் மாவை சேனாதிராசா கொழும்பில் நிற்கின்றார். அவருக்கு இது பற்றித் தெரிவியுங்கள் என்று.

அப்போது அவர் சொன்னார், நான் அவருக்கு அறிவித்துவிட்டேன். அவர் உங்களுக்குத் தெரியப்படுத்துவார் எனக் கூறினார். அதற்கு நான் கூறினேன். அவ்வாறு அவர் இன்னும் தெரியப்படுத்தவில்லை என்றும் தெரியப்படுத்திய பின்பு அதுபற்றி யோசிக்கலாம் என்றும் கூறினேன். ஆனால் அதற்குப் பிறகு எந்தச் சந்தர்ப்பதிலும் மாவை சேனாதிராசா இந்தக் கூட்டத்தில் பங்குபற்றும்படி எனக்குக் கூறவில்லை. ஏற்கனவே கடைசியாக யாழ்பாடியில் நடைபெற்ற கூட்டத்தில் ஏற்பட்ட அனுபவம் எனக்கு உண்டு. தற்செயலாக எனக்குச் சொன்னால் கூட வேறு ஒருவரைப் போகச் சொல்லியிருப் பேன். அவருக்கே சொல்லியிருப்பேன். ஆனால் எனக்கு எந்த விதத்திலும் மாவை சேனாதி ராசா இந்தக் கலந்துரையாடலில் என்னைக் கலந்துகொள்ளுமாறு சொல்லவே இல்லை. சொல்ல வேண்டிய சந்தர்ப்பமும் இல்லை.

ஆகவே இந்தா வாறேன், அந்தாவாறேன் என்று சொல்லிக் கொண்டு வராமல் விடுகிற வேலை எனக்குத் தேவையில்லை. நான் வரவில்லை என்றால் நேராகவே சொல்லுவேன். அதற்கு எனக்குத் தைரியம், துணிச்சல் உண்டு. எனக்கு மாவை சேனாதி ராசா சொல்லவே இல்லை. ஒருவேளை செல்வம் அடைக்கலநாதனுக்கு அவர் சொல்லியிருப்பார் சிவஞானத்துக்கு சொல்கிறேன் என்று. அது எனக்குத் தெரியாது. எனக்கு அவர் சொல்லாமல் நான் போக வேண்டிய பொறுப்பு இல்லையே. எனக்குத் தலைவர் சொல்லாமல் என்னுடைய பாட்டில் போய் அதில் இருந்து ஏற்கனவே மொக்கவீனப்பட்ட மாதிரி இன்னொரு தடவை மொக்கவீனப்பட வேண்டிய தேவை இல்லையே. ஆகவே, இந்தா வாறேன் அந்தா வாறேன், போறேன், வாறேன் என்று நான் சொல்லவும் இல்லை. அதிலே எனக்குச் சம்பந்தமும் இல்லை. அந்தக் கருத்துத் தவறானது.

**கேள்வி:** அப்படியான அனைத்துக் கட்சி ஒற்றுமையை நீங்கள் எப்படிப் பார்க்கின்றீர்கள்?

**பதில்:** எனக்கு அது பற்றித் தெரியாது. அப்படி ஓர் அனைத்துக்கட்சி ஒற்றுமை என்று ஒன்று இருந்ததுதானே. அந்த ஒற்றுமையின் ஆரம்பக் கட்டத்திலே முயற்சி எடுத்தவன் நான்தானே. எனது வீட்டிலே தானே எல்லாம் நடந்தது. இது எல்லாருக்குமே தெரிந்த விடயம். ஆகவே, ஒற்றுமைக்கு நான் மாறானவன் அல்லன்.

**கேள்வி:** அந்த முயற்சி ஏன் கைவிடப்பட்டது?

**பதில்:** அது பற்றி எனக்குத் தெரியாது. ஏனென்றால் நான் கைவிடச் சொல்லவும் இல்லை. கைவிடவும் இல்லை. ஏதோ பேசினார்கள். பின்பு கைவிட்டார்கள். எனக்கு உண்மையில் அதுபற்றித் தெரியவில்லை. பின்னாலே ஏன் இப்படி ஒரு முயற்சி எடுக்கப்படுகின்றது என்றும் எனக்குத் தெரியாது.

**கேள்வி:** சீன நிறுவனம் இங்கு வந்து சட்டவிரோதமாக கடலட்டை பிடிப்பது, கடறொழிலில் ஈடுபடுவதைப் பற்றி நீங்கள் எவ்வாறு பார்க்கின்றீர்கள்?

**பதில்:** இதில் எனக்கு சந்தேகம் இருக்கின்றது. கம்பனி ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. அந்தக் கம்பனியில் சீனர் ஒருவர் ஜாஎல விலாசத்தோடுதான் கம்பனி பதியப்பட்டதாகத் தெரிய வருகின்றது. ஆகவே, அது எவ்வாறு பதியப்பட்டது என்றும் தெரியவில்லை. ஆனால் எங்களுக்குத் தெரியாத தொழில்நுட்பத்தை இன்னொருவரிடம் அவர் எவராகவிருந்தாலும் பெற்றுக் கொள்வதில் எந்தப் பிரச்சினையும் இல்லை. ஆனால் ஏன் சீனத்தவரை பங்குதாரர் ஆக்கினார்கள் என்பது எனக்குப் புரியவில்லை. எங்களுடைய நாட்டவர்கள் தொழில் செய்வதில் எந்த ஆட்சேபணையும் இல்லை. அவர்கள் செய்யலாம். அந்தத் தொழில்நுட்பத்தைக் கற்றுக் கொள்ளலாம். பெற்றுக் கொள்ளலாம். ஆனால் அவர்களையும் இணைத்துக் கொண்டு அந்த சீன ஆதிக்கம் இங்கு வரக்கூடிய வாய்ப்பை அளித்தது தான் அவ்வளவு பொருத்தமானது அல்ல என்று நான் நினைக்கின்றேன். அவர்கள் செய்யலாம். அந்தக் கம்பனியில் பங்குதாரர்கள் செய்யலாம். அதற்காக. சீன நாட்டவரை முக்கிய பங்குதாரராக இணைத்துக் கொள்ள வேண்டிய தேவை இல்லை.

(11ஆம் பக்கம் பார்க்க)




# பாட்டும் நானே? பாவமும் நானே!

**1. கேள்வி:-**

கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் அவர்கள் தனக்கு அடுத்து கட்சிக்குத் தலைமை ஏற்கப்போவது யார் என்று அடையாளம் காட்டாமல் இருக்கிறாரே, ஒரு ஜனநாயக அமைப்பு இங்ஙனம் செயல்படுவது சரியாகுமா? இதையெல்லாம் நீங்கள் கண்டிக்கமாட்டீர்களா?

**பதில் :-**

உங்களின் ஒரு கேள்வியிலிருந்து எனக்குப் பல கேள்விகள் உதயமாகின்றன. அவற்றைக் கீழே வரிசைப்படுத்துகிறேன்.

* கூட்டமைப்பு ஜனநாயகம் பேணும் ஒரு கட்சிதானா?

* சம்பந்தர் வெளிப்படையாய் அடுத்த தலைவரை இனங்காட்டவில்லையே தவிர, மறைமுகமாய் இனங்காட்டாமல் இருக்கிறாரா?

* அடுத்த தலைவரை சம்பந்தர் இனங்காட்டினால் கூட்டமைப்பு, தொடர்ந்து கூட்டு அமைப்பாய்ச் செயற்படுமா?

* சுயம் பேணத்தக்க, ஆளுமையும் துணிவுமுடைய ஒரு தலைவரை நியமிக்க உலக, பிராந்திய வல்லரசுச் சக்திகள் இடந்தருமா?

* கூடியிருக்கும் கட்சிகளுக்கு நாடாளுமன்றில் பேசவே அனுமதி வழங்கப்படாத நிலையில் அக்கட்சிகளிலிருந்து ஒருவரைத் தலைவராக்குதல் நடவாது என்பது திண்ணம். எனவே அதை விட்டு விடலாம். தமிழரசுக்கட்சிக்குள்ளேனும் குறித்த ஒருவரைத் தலைவராக்க அங்கிருக்கும் மற்றவர்கள் இடந்தருவார்களா?

இக்கேள்விகளுக்கு விடை காண்பது கடினம் என்றே நினைக்கிறேன். கடைசியாக நீங்கள் கேட்ட ஒன்றிற்குப் பதில் சொல்லவேண்டும். அடுத்த தலைமையைத் தீர்மானிக்காத கூட்டமைப்பை


சம்பந்தன்

ஏன் கண்டிக்கவில்லை என்று கேட்கிறீர்கள்? உங்களிடம் திரும்ப ஒன்றை நான் கேட்கவேண்டியிருக்கிறது. தமிழ்க் கட்சிகளின் தலைவர்களுக்குள் வேறு எந்தக் கட்சியின் தலைவர்தான் தனக்கு அடுத்த தலைவர் இவர்தான் என அறிவித்திருக்கிறார்? இதற்கு நீங்கள் பதில் சொன்னால் அதற்குப் பிறகு நான் சம்பந்தரைக் கண்டிக்கிறேன்.

**உலகநாதரின் ஒப்பீனியன் * 'சும்மா இரு சொல் அற' என்ற அருணகிரியார் வாக்கே சம்பந்தனாரின் கொள்கை ஆகும்.**

**பலர் பேசி வாழ்விழக்கிறார்கள். சம்பந்தர் பேசாமலே வாழ்வு பெறுகிறார். கெட்டிக்காரர் தானுங்கோ!**

**2. கேள்வி:-**

மரபிலக்கியக்காரராய் உங்களை அடையாளப்படுத்துகிறீர்கள். யதார்த்தம் பேசுகிற நவீன இலக்கியங்களை விட உங்கள் மரபிலக்கியத்தில் அப்படி என்ன தான் இருக்கிறது?

**பதில் :-**

உங்கள் கேள்விக்குப் பல காரணங்களைப் பதிலாய்ச் சொல்லலாம். ஆனால் பதில் சற்று நீளக்கூடும். முக்கியமான வற்றை மட்டும் சொல்ல முயல்கிறேன். சமூகப் பிரச்சினைகளை நவீன இலக்கியங்கள் அணுகும் முறை வேறு, மரபிலக்கியங்கள் அணுகும் முறை வேறு. நவீன இலக்கியங்கள் வெளிப்பட்டுத் தெரியும் காரியங்களை மட்டுமே கண்டிக்கின்றன. மரபிலக்கியங்கள் அக்காரியங்களின் காரணங்களைத் தேடி அவற்றைக் கண்டிக்கின்றன. விளங்கவில்லையா? உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன். நவீன இலக்கியங்கள் பொறாமையின் விளைவைக் கண்டிக்கும். மரபிலக்கியங்கள் பொறாமையைக் கண்டிக்கும். விடயம் இவ்வளவுதான். காரியங்களைக் கண்டிக்கும் போது நவீன இலக்கியங்கள் அதிக அழுக்குகளைப் பதிவு செய்கின்றன. அதைப் படிப்போர் மனதில் அவ் அழுக்குகள் பற்றிய ஆர்வமும் உண்டாக வாய்ப்பிருக்கிறது. காரணங்களைக் கண்டிக்கும் மரபிலக்கியங்களில் அப்பிரச்சினை இல்லை.

அதுபோலவே நவீன இலக்கியங்கள் பலவற்றில் கெட்டவனின் வெற்றி வழிமொழியப்படுகிறது. அதனால் கற்றோர்க்கு கெட்டவனாகவும் வாழலாம் எனும் பிழையான வழிப்படுத்தலை அது செய்துவிடுகிறது. மரபிலக்கியங்களிலும் பிழையானவற்றின் பதிவுகள் உண்டுதான். ஆனால் முடிவில் அப்பிழைகளின் தோல்வி நிச்சயம் பதிவு செய்யப்படும்.

நடந்தவற்றை மட்டும் பதிவு செய்யும் நவீன இலக்கியத்தில் அக்கால கிழவிகளின் ஊர்க்கதை பேசும் கவர்ச்சி மட்டுமே உண்டு. நடந்தவற்றை வைத்து நடக்கவேண்டியவற்றைக் காட்டும் மரபிலக்கியங்களில் கற்றோரின் நெறிப்படுத்தல் உண்டு.

சிற்றினம் சேராமை எனும் குறள் அதிகாரத்தில் சிற்றினத்தை அடையாளம் காட்டும் பரிமேலழகர் எனும் அறிஞர் நல்லதன் நன்மையும் தீயதன் தீமையும் இல்லை என்று உரைப்பாரே சிற்றினத்தார் என உரைக்கிறார். அதேபோல பெரியாரைத் துணைக்கோடல் எனும் குறள் அதிகாரத்தில் பெரியார் யார் என வரைவு செய்யும் போது அவர், தீ நெறியில் இருந்து விலக்கி நன்னெறியில் செலுத்தும் பேரறிவாளரே பெரியோர் எனக் குறிப்பிடுகிறார். நவீன இலக்கியங்கள் பெரும்பாலும் தமது பாதிப்புக்கு அறம் மீறியேனும் பழிவாங்க நினைக்கும் சிற்றினத்தாரையே அறிமுகம் செய்கின்றன. மரபிலக்கியங்கள் பெரும்பாலும் தமது பாதிப்பைக் கடந்து உயர்ந்து நிற்கும் பெரியோரையே அறிமுகம் செய்கின்றன. தன் மனைவியைக் கடத்தியவன் போரில் தோற்று நிற்கும் போது 'இன்று போய்ப் போர்க்கு நாளை வா!' என உரைக்கும் இராமனையும், வஞ்சகமாய்த் தமது அரசினைப் பறித்த துரியோதனனிடம் ஐந்து வீடேனும் தா எனக்கேட்கும் தர்மனையும் மேற்சொன்ன கருத்துக்குச் சாட்சியங்கள் ஆக்கலாம்.

நவீன இலக்கியங்களை, பாதிப்புற்றவர்களே பெரும்பாலும் எழுதுகிறார்கள். மரபிலக்கியங்களை, சமூகத்தை நெறிப்படுத்தக் கூடிய கற்றவர்களே எழுதியிருக்கிறார்கள். ஐம்பது, நூறாண்டுகளைக் கூடக் கடப்பதற்கு முன் இறந்துபோகிற நவீன இலக்கியங்கள் எங்கே? ஆயிரம் ஆண்டுகளைக் கடந்து நிற்கக்கூடிய மரபிலக்கியங்கள் எங்கே? இது ஒன்றே மரபிலக்கியங்களுக்கான கால அங்கீகாரத்தைக் காட்டுகின்றதல்லவா? அக் கால அங்கீகாரமே மரபிலக்கியங்களின் பெருமைக்குச் சான்றாம்.

தாம் யதார்த்த சமூகத்தைப் பேசுவதாக நவீன இலக்கியங்கள் சொல்லிக் கொண்டாலும். இன்றுவரை வாழ்வியல் உதாரணத்திற்கு பொதுமக்கள் அவன் தர்மன், இவன் இராமன், அவள் சூர்ப்பணகை, இவள் கூனி என மரபிலக்கியப் பாத்திரங்களைத் தான் கையாள்கிறார்கள். விளங்காத இலக்கியங்கள் என நவீன இலக்கியவாதிகள் கிண்டல் செய்யும் மரபிலக்கியங்கள் மக்களுக்கு விளங்கியிருக்கின்றன. விளங்கும் வகையில் எழுதியதாய்ச் சொல்லும் நவீன இலக்கியங்கள் மக்களிடம் செல்லவில்லை என்பதற்கு மேற்சொன்ன ஒன்றே போதுமான சாட்சியாம். இவ்வளவும் போதாதா நான் மரபிலக்கியங்களை விரும்ப.

**உலகநாதரின் ஒப்பீனியன் * இது பதிலா? பதில் கட்டுரையா? பதில் ரொம்பத்தான் நீளமுங்கோ!**

**3. கேள்வி:-**

இந்த ஒரு பதவிக்காலத்துடன் விலகிவிடுவேன் என்று சொல்லிக் கொண்டிருந்த நம் ஜனாதிபதி திடீரென அடுத்த ஜனாதிபதித் தேர்தலிலும் தான் போட்டியிடுவேன் என்கிறாரே, பார்த்தீர்களா?

**பதில் :-**

இதிலென்ன புதுமை இருக்கிறது? இதுபற்றிக் கம்பன் அன்றே சொல்லிவிட்டான். கைகேயியின் மனதை மாற்ற நினைக்கும் கூனி 'இராமன் ஆட்சிக்கு வந்தால் உன் வாழ்வு சிதைந்து போகும்' என்கிறாள். அதற்கு கைகேயி, 'இராமன் நல்லவன் அவன் அப்படி செய்யமாட்டான்.' எனப் பதில் உரைக்கிறாள். அவளின் கருத்தை மறுத்துப் பதிலுரைக்கும் தீய கூனியின் வாயினூடாக ஒரு தூய கருத்தைப் பதிவு செய்கிறான் கம்பன். 'அறம் நிரம்பிய அருளுடை அருந்தவர்க்கே


கோட்டாபய

னும் பெறலரும் திருப்பெற்றபின் சிந்தனை பிறிதாம்' என்பதே கூனியின் வாயிலிருந்து வரும் கருத்தாம். அனைவரையும் நேசிக்கும், அருளைப் பண்பாகக் கொண்ட அரிய தவங்களைச் செய்தவர்க்கும், கிடைத்தற்கரிய செல்வம் கிடைத்தால் சிந்தனை மாறிவிடும் என்பது அப்பாடல் அடிகளின் பொருள். அருளுடைய, தவம்செய்வாரின் கதியே இது வென்றால், நமது ஜனாதிபதியின் மனம் மாறியதில் ஆச்சரியப்பட என்ன இருக்கிறது? அப்பதவியைக் கொத்தும் ஆசையுடன் சொண்டைக் கூராக்கிக் கொண்டிருந்த கழுகுகளின்பாடுதான் கவலைக்கிடமாய் ஆகியிருக்கிறது. முக்கியமான ஒன்று, தேர்தலில் நிற்பது அவரது உரிமை. அதே போல வெற்றியைத் தருவது மக்களின் உரிமை. இனியும் தருவார்களா?

**உலகநாதரின் ஒப்பீனியன் * 'நித்தம் நித்தம் மாறுவது எத்தனையோ நெஞ்சில் நினைப்பதிலே நடப்பது தான் எத்தனையோ'**

**கண்ணதாசனின் தீர்க்கதரிசனம் வாழ்க!**

**4. கேள்வி:-**

எதிர்க்கட்சிகள் கொண்டுவந்த, எரிபொருள் அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை தோல்வியடைந்துவிட்டதே?

**பதில் :-**

எப்போதோ தெரிந்த முடிவுதான் இது. ஆனாலும் எதிர்க்கட்சிகள் அரசுக்கு எதிரான தமது பிரச்சாரத்தை மக்கள் மத்தியில் கொண்டு செல்ல, இந்த பிரேரணை மீதான விவாதத்தை நல்லபடி பயன்படுத்திக்கொண்டன. அந்த அளவில் எதிர்க்கட்சிகளுக்கும் இது ஏதோ


உதயகம்மன்பில

ஒருவகையில் வெற்றி என்றுதான் சொல்ல வேண்டும்.

**உலகநாதரின் ஒப்பீனியன் * முதல் முதலாக அவரைப் பகிரங்கமாய்க் கண்டித்த அவரது கட்சியின் செயலாளர் என்ன செய்யப் போகிறாராம்?**

**5. கேள்வி:-**

கிளிநொச்சி கௌதாரி முனையில் சீன நிறுவனம் அமைத்துள்ள கடலட்டைப் பண்ணை பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**பதில் :-**

பெரும் இலாபம் தரக்கூடிய தொழில் அது என்கிறார்கள். நம்மவர்க்கு அத்தொழிலில் பயிற்சி இல்லை என்பதையும் ஒத்துக் கொள்கிறார்கள். இந்நிலையில் மற்றவர்கள் மூலம் கிடைக்கும் பொருளாதார வாய்ப்பை நாம் உதறவேண்டும் என்று சொல்லமாட்டேன். அங்கு சென்ற கடல் தொழில் அமைச்சர் டக்ளஸூம் இதனையே சொல்லியிருக்கிறார். ஆனால் இப்பிரச்சினையில் மூன்று விடயங்கள் மனதை நெருடுகின்றன. நம் தமிழ்ப்பிரதேசத்தின் நிலப் பகுதிகளை தமிழ்த் தலைவர்களுடன் ஆலோசிக்காமல் வேற்றொருவருக்கு வழங்கியது குற்றம் என்பது ஒன்று. இந்தக் கடலட்டைப்பண்ணை அனுமதி வழங்கலில் சரியான முறைமை கடைப்பிடிக்கப்படாதது ஏன் என்பது மற்றொன்று. இந்தியாவை அண்மித்திருக்கும் வடபகுதிக்குள் சீனாவைப் பிரவேசிக்கச் செய்வதன் மூலம், இந்தியாவின் பகை விலைக்கு வாங்கப்படுகிறதா? - என்பது இன்னொன்று. இவை மூன்றுமே இத் தேசநலனைச் சிதைப்பது பற்றிய விடயங்கள். இவற்றுக்குச் சரியான பதில் காணத் தவறுவோமாயின் பிற்காலத்தில் நாடு பேரழிவைச் சந்திக்க வேண்டி வரலாம்.

**உலகநாதரின் ஒப்பீனியன் * கடலட்டையும் இரத்தம் உறிஞ்சுமா? ஹி..ஹி..**


கௌதாரிமுனை கடலட்டை பண்ணை

# யாழ்.குருநகர் பிரதேசத்தில் சட்டவிரோத கடலட்டைத் தொழிலைக் கட்டுப்படுத்துக!

## அமைச்சர் டக்ளஸ் பணிப்புரை

**(இ.கலையமுதன்)**

யாழ்., குருநகர் பிரதேசத்தில் மேற்கொள்ளப்படுகின்ற சட்டவிரோதக் கடலட்டை செயற்பாடுகளை உடனடியாகக் கட்டுப்படுத்துமாறு கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நாரா எனப்படும் தேசிய நீரியல்வள ஆராய்ச்சி நிறுவனத்தால் அடையாளப்படுத்தப்பட்ட பகுதிகளைத் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் இழுவை வலைப் படகுகளைப் பயன்படுத்துவதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், அதனை மீறுகின்ற வகையிலும் கடற்றொழில் சங்க ஒழுங்கு விதிகளை மீறும் வகையில் சுமார் 39 இழுவை வலைப்படகுகள் கடலட்டை தொழிலில் ஈடுபட்டு வருகின்றன என்று குருநகர் கடற்றொழிலாளர் சங்கத்தின் பிரதிநிதிகளால் கடற்றொழில் அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டிருந்தது.

இதையடுத்து, தடைசெய்யப்பட்ட தொழில் முறைகள் அனைத்தும் கட்டுப்படுத்த வேண்டும் எனத் தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இழுவை வலைப்



படகுகளைப் பயன்படுத்தி கடலட்டை தொழிலில் ஈடுபடுகின்றவர்களைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு, கடற்றொழில் திணைக்களத்தின் யாழ்.மாவட்ட பிரதானி ஜெ.சுதாகரனுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

# யாழ். மாநகர சபையில் அஞ்சலி



**(எஸ்.நிதர்ஷன், இ.கலையமுதன்)**

1983ஆம் ஆண்டு கறுப்பு ஜூலை கலவரத்தில் படுகொலைசெய்யப்பட்ட தமிழ் உறவுகளுக்கு யாழ்ப்பாணம் மாநகர சபையில் நேற்று சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

யாழ்.மாநகர மேயர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் தலைமையில் குறித்த அஞ்சலி நிகழ்வு நடைபெற்றது.

இதில் பிரதி மேயர் ரி.ஈசன் உள்ளிட்ட மாநகர சபை உறுப்பினர்கள் சிலர் கலந்து கொண்டு படுகொலையான தமிழர்களை நினைவு கூர்ந்து, சுடரேற்றி, மலர் தூபி அஞ்சலி செலுத்தினர்.

# 3 கோடி 20 லட்சம் ரூபா கேரள கஞ்சாவுடன் வெற்றிலைக்கேணியில் ஒருவர் மாட்டினார்

யாழ்.,வடமராட்சி கிழக்கு, வெற்றிலைக்கேணி பகுதியில் 3 கோடி 20 லட்சம் ரூபா பெறுமதியான கேரள கஞ்சாவுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று கடற்படையினர் அறிவித்துள்ளனர்.

சந்தேகநபரிடமிருந்து 107 கிலோகிராம் கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

கட்டைக்காடு-வெற்றிலைக்கேணி பகுதியில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப் பின்போது, சந்தேகத்துக்கிடமான முறை யில் நடமாடிய ஒருவர் கைதுசெய்யப்பட் டுள்ளார். அவரிடமிருந்து கேரள கஞ்சா அடங்கிய 16 பொதிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணையின் போது, வீடொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கேரள கஞ்சா அடங்கிய மேலும் 24 பொதிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் முள்ளியான்



பகுதியைச் சேர்ந்த 33 வயதான நபரே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அவர் மேலதிக விசாரணைகளுக்காக மருதங்கேணி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

## நினைவுகளில் வாழும் ........

கேள்வி: வடக்கு மாகாண ஆளுநர் மாற்றம் வரக்கூடும் என்று தெரிவிக்கப்படுகின்றது. அது பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?

பதில்: ஆளுநரையும் மாற்றுகின்றார்களோ தெரியவில்லை. ஏனென்றால் இப்ப நடக்கின்ற விடயங்கள் ஒன்றும் இந்த நாட்டிலே எதிர்வுகூறமுடியாது உள்ளது. இப்போதைய ஆளுநர் இந்தப் பதவிக்கு விருப்பமில்லாமல்தான் வந்தவர் என்றுதான் என்னுடைய அறிதல். அவரும் விரும்பி விலகலாம். அல்லது அரசாங்கமும் அவரைத் தூக்கலாம். இந்த அரசாங்கத்துக்கு இது பெரிய பிரச்சினையும் இல்லைதான். இது வழமையாக நடக்கின்றவைதானே. இன்னுமொரு விடயத்தைச் சொல்ல வேண்டும். மாகாணக் காணி ஆணையாளர் குகநாதன் அப்பதவியிலிருந்து உடனடியாக மாற்றி எங்களுடைய செயலகத்துக்குத்தான் இன்று தொடக்கம் நியமிக்கப்பட்டுள்ளார். செயலகத்தில் ஏற்கனவே பதில் கடமையாற்றிய ரூபினி வரதலிங்கத்தை நீக்கி அவருக்குப் பதிலாக குகநாதனை நியமித்திருக்கின்றார்கள். ஏற்கனவே அவர் காணிப் பிரச்சினை ஒன்றில் நேர்மையாக, சரியாக நடந்துகொண்டார் என்ற கருத்து இருக்கின்றது. அது சிலருக்கு முரண்பாடாக இருந்ததாக இருக்கின்றது. ஆகவே, அவர் தூக்கப்பட்டு இங்கு அனுப்பப்பட்டுள்ளார். இது கூட ஒரு பொருத்தமான செயற்பாடாக நான் பார்க்கவில்லை. அது வருத்தத்துக்கும் கவலைக்குமுரிய விடயம். திடீரென்று அவரை தூக்கினார்கள். இங்குதூக்குகிறதுஎன்பதுபெரியபிரச்சினைஇல்லைத்தானே. அது சரியில்லாத விடயமாகும். அவர் சரியாக கடமையைச் செய்தார் என்று நான் நினைக்கின்றேன்.

கேள்வி: அனைத்துக் கட்சி ஒற்றுமைக் கூட்டத்தின் போது தமிழரசுக்கட்சி தலைவர் றெலோ அலுவலகத்திற்குச் சென்று சந்தித்தமை தொடர்பாக கட்சிக்குள் இருந்து குற்றச்சாட்டுவருகிறது. அதுபற்றிஎன்னநினைக்கின்றீர்கள்?

பதில்: அப்படி ஒரு குற்றச்சாட்டு இருக்கின்றது. எனக்கு அது பெரிய பிரச்சினையாகத் தெரியவில்லை. சில பேர் சொன்னார்கள். நான் அது பற்றி சொல்லவில்லை. ஏனென்றால் அவர்களும் எமது கட்சி அலுவலகத்துக்கு வந்தவர்கள்தானே. அதை நாம் மறுக்க முடியாது. எமது கட்சி அலுவலகத்துக்கு நான் போய் இருந்த சமயத்தில் செல்வம் அடைக்கலநாதன் வந்தவர். சித்தார்த்தனும் வந்தவர். அதிலே பெருமை சிறுமை பார்க்கின்றமை நியாமில்லை. பங்காளிக் கட்சிகளின் அலுவலகத்துக்குப் போகின்றமை தப்பான விடயம் இல்லை. ஆனால் அவ்வாறான குற்றச்சாட்டு இருக்கின்றது எனக்குத் தெரியும். நான் அதைக் குற்றச்சாட்டாகப் பார்க்கவில்லை. அது வேறு. ஆனால் நான் இப்பவும் தெளிவாகச் சொல்கின்றேன். இப்பொழுது இருந்தால் போல இந்த முயற்சி ஏன் திடீரென்று முளைத்தது? சிறிகாந்தா சொன்னமை போல ஏற்கனவே உள்ளதை ஏன் தொடரமுடியாது போனது? ஆள்களை மாற்றலாம். நான் பேச்சாளரும் அல்லன். ஒன்றும் அல்லன். ஊடகங்கள் சும்மா பேச்சாளர் என்று போட்டதால் அவர்கள் பதற்றம் அடைந்தமைக்கு நான் பொறுப்பாளி அல்லன். இணைப்பாளராக சிவாஜிலிங்கத்தை இருக்கச் சொல்லிவிட்டு நான் பேசாமல் இருந்தேன்.

ஆனால் ஏன் புதுசுபுதுசாகத் தொடங்கவேண்டும் என்பது எனக்குப் புரிதல் இல்லை. எனக்கு ஒன்று தெரியும் மாவை சேனாதிராசா கூட செல்வம் அடைக்கலநாதனுக்கும் சித்தார்த்தனுக்கும் அவசரப்படாமல் போக வேண்டும் என்று ஒரு கருத்தைச் சொன்னவர் என்று அவரே எனக்குச் சொல்லியிருக்கிறார். இந்த அவசரம் ஏனென்று எனக்குப் புரியவில்லை.

கேள்வி: இந்த அனைத்துக் கட்சிகளின் ஒற்றுமை முயற்சி உங்களுடைய தமிழரசுக் கட்சியின் மத்திய குழுவின் அனுமதியில்லாமல் முன்னெடுக்கப்படுகின்றது என்று சொல்லுகின்றார்கள். அது பற்றி....?

பதில்: மத்திய குழுவின் அங்கீகாரமின்றி மற்றவர்கள் எல்லாம் சேர்ந்து பேசினார்களோ என்று எனக்குத் தெரியவில்லை. என்னிடம் மாவை சேனாதிராசா என்ன அவசரம் என்று சொன்னமை உண்மை. அவர் தலைவர் தானே. அதுக்குப் பொறுப்பாளர்தானே. அவர் போகலாம். நான் அதற்கு மறுப்பில்லை. அது பற்றி விவாதிக்கப்படுகின்றபோது நாங்கள் பேசுவோம்.

கேள்வி:அனைத்துக் கட்சிகளின் இணைவு என்பது கடந்த ஒக்ரோபாரில் இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததன் பின்பு திலீபனின் நினைவேந்தலுடன் தான் ஆரம்பமானது. அனைத்துக் கட்சி ஒற்றுமை முயற்சி என்பது குறிப்பாக உங்களின் முயற்சியில்தான் இந்த அலுவலகத்தில் நடைபெற்றது. ஆனால் அந்த முயற்சிகள் கைகூடினவாக இருக்கவில்லை. ஆகவே, இனியும் எடுக்கப்படும் இந்த முயற்சிகள் கைநழுவிப் போகுமா தொடர்ந்தும் நீடிக்குமா?

பதில்: என்னைப் பொறுத்தவரையில் அந்தச் சந்திப்பு வெற்றிகரமாக முடிந்தது என்றுதான் கூறுவேன். ஏனென்றால் 10 கட்சிகளும் இந்த மேசையில் வைத்துத்தான் எல்லோரும் கையெழுத்து இட்டு ஜனாதிபதிக்கு ஒவ்வொருவருடைய கருத்துக்களைக் கூட்டாகத் தெரிவித்திருக்கிறோம். அதுதான் வெற்றி. அது போதும். எங்களுடைய ஆட்சேபனைகளை, அதிருப்திகளை நாங்கள் தெரிவித்திருக்கிறோம்.

கேள்வி: அது ஏன் தொடராமல் போனது?

பதில்: தொடர்ந்து இருக்கலாம். அப்படித்தான் நடந்தது. பின்பு ஏற்பட்ட சில கருத்து வேறுபாடுகள். உதாரணத்திற்கு பேச்சாளர். பேச்சாளர் என்று ஒருவரையும் நியமிக்கவில்லை. அந்தக் கருத்து பெரிய விசயமாக இருக்கவில்லை. அது முரண்பட்ட கருத்துக்கள். பல பேருக்கு பல விடயங்கள் முரண்பாடுகள். எனக்கு ஒரு முரண்பாடுகளும் இருக்கவில்லை. ஆனால் இப்ப இருந்தால் போல திடீரென்று அதைத் தொடராமல் புதிதாக ஏன் ஒன்று என்ற கேள்வி எனக்கு இருக்கின்றது. எனக்கு அது தெளிவுபடுத்த வேண்டும் என்பதுதான் எனது நிலைப்பாடு. இப்பவும் அதுதான். ஏன் என்ன காரணம் தேவை. எனக்கு தெளிவு தேவை.

கேள்வி:அடுத்த கூட்டத்துக்கு அழைப்பு வந்தால் போவீர்களா?

பதில்: கட்சி என்ன செய்வார்கள் என்று எனக்குத் தெரியாது. இதற்குப் பிறகு மாவை சேனாதிராசா என்னோடு தொடர்பு கொள்ளவில்லை. நானும் அவருடன் தொடர்பு கொள்ளவில்லை. அவர் போவார் வருவார். அது பிரச்சினை இல்லையே. பங்காளிக் கட்சிகள் கூப்பிட்டால் போவார். அதுதான் என்னுடைய கருத்து. உதாரணத்துக்கு கடந்த கூட்டத்தில் றெலோ எம்.பிக்கள் எல்லோரும் கலந்து கொண்டார்கள். தமிழரசுக் கட்சி எம்.பிக்கள் ஏன் கலந்து கொள்ளவில்லை. அதற்கு கூறுகின்றார்கள் மாவைக்கு அறிவித்தால் எல்லோரையும் கூட்டிக் கொண்டு வரவேண்டும் என்று. எப்ப அப்படி நடந்தது? நான் கூட மார்ட்டின் றோட் கூட்டத்தில் சில தகவல்களைச் சொல்லிவிட்டு மற்றப் பக்கமாகப் போனவன். நீங்கள் அறிந்திருப்பீங்கள் தானே. ஏனென்றால் அது தலைவர்கள் கூட்டம்.

கேள்வி: உங்களுடைய கூட்டில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மட்டும்தான் கலந்துகொள்ளவில்லை. ஆனால் அந்த அறிக்கையில் கையெழுத்து இட்டவர்கள். ஏனைய கூட்டங்களில் கலந்து கொள்ளவில்லை. அந்த அடிப்படையில் இந்தக் கூட்டமைப்பில் தமிழரசுக் கட்சி பின்னடிக்குமா?

பதில்: இல்லை. இல்லை. இந்தக் கூட்டங்களில் கலந்து கொண்டவர்கள். குறிப்பாக சுபாஸ், காண்டீபன், திலீபன் போன்றோர். எனக்கு அதைப் பற்றித் தெரியாது. இதற்கு நான் கருத்து சொல்ல மாட்டேன். என்னைப் பொறுத்தவரையில் எனக்குத் தெளிவுபடுத்தல் தேவை. இதனுடைய அவசரத் தன்மை என்ன? பின்னணி என்ன என்ற தெளிவுத் தன்மை எனக்குத் தேவைப்படுகின்றது. அதற்கு நான் எதிர்ப்பு அல்லன்.

கேள்வி: தமிழ்த் தேசிய கூட்டணியின் சார்பிலே மாகாண அதிகாரங்களை மத்தி கையகப்படுத்துவதற்கு எதிராக வழக்கு ஒன்று தாக்கல் செய்வதற்கு கூடி முடிவு எடுத்து இருக்கின்றார். இது பற்றி என்ன சொல்கின்றீர்கள்?

பதில்: நல்ல விடயம். வழக்கு போடலாம். சட்டரீதியாக நடவடிக்கை எடுக்கலாம். ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். நாங்கள் ஒரு நியதிச் சட்டம் இயற்றியிருக்கிறோம். அந்த நியதிச் சட்டத்தில் வைத்தியசாலைகள் எல்லாம் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன. ஆனபடியாக மாகாண சபை இல்லாத காலத்திலே அதனை எடுக்க இயலாது என்று சொல்லுவேன். ஆகவே அதனை வரவேற்கின்றேன்.

கேள்வி: ஒத்துழைப்பு வழங்குவீர்களா?

பதில்: நிச்சயமாக வழங்குவேன். கேட்டால் செய்வேன்.

கேள்வி: நீங்கள் ஒரு மூத்த அரசியல்வாதி. தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவின் மகன் கட்சியில் இருந்து விலகிவிட்டார் என சில இணையத்தளங்களில் செய்தி வந்திருக்கின்றது. இது உண்மையா? இதைப்பற்றி என்ன கருதுகின்றீர்கள்?

பதில்: எனக்கு இதைப்பற்றி ஒன்றும் தெரியாது. இந்த ஊடகங்கள் குட்டி போட்டு, அதில் ஒன்று சொல்லும் கட்சியை விட்டு போனது என்று. இன்னும் ஒன்று சொல்லும் போகவில்லை என்று. எனக்கு உண்மையாக இதுவரையில் கலையமுதனோ, சுதர்சனோ தெளிவாகச் சொல்லவில்லை. ஆனால் நான் சுதர்சனைக் கேட்டேன். தான் விலகியிருப்பதாகக் கூறினார். அது அவரின் உரிமை தானே. கலையமுதனுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்ட போது அவர் கொழும்பில் நிற்கிறார் என்று தெரிய வந்தது. அதன் பின்பு அவரும் பேசவில்லை. நானும் பேசவில்லை. இதேவேளை, அவர் யாழ். மாவட்டத்தின் இளைஞர் அணியின் செயலாளர். தலைவர் பிருந்தாபன். - என்றார்.

# தியாகி அறக்கொடை அனுசரணையில் ஆரியகுளத்தை அழகுபடுத்த ஏற்பாடு

(கலையமுதன்)

யாழ்ப்பாணம், ஜூலை 24

யாழ்.நகரின் மத்தியில் காணப்படுகின்ற ஆரியகுளத்தைப் புனரமைத்து அந்தப் பகுதயை அழகுபடுத்தி மக்கள் மனம் கவர்ந்த ஒரு பிரதேசமாக மாற்றுவதற்கான அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று (வெள்ளிக்கிழமை) மதியம் 12 மணிக்கு ஆரியகுளத்திற்கு அருகில் இடம் பெற்றது.

மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் மேற்கொண்ட முயற்சியால் தியாகி அறக்கொடை நிதியத்தின் வாமதேவா தியாகேந்திரனுடைய அனுசரணையில் குறித்த குளமும் அதன் அயல் பகுதிகளும் புனரமைத்து அழகுபடுத்தப்படவுள்ளன.

ஆரியகுளதடதை அழகுபடுத்தும் பணிகள்மிகவிரைவில்ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந்த அங்குரார்ப்பண நிகழ்வில் மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் , மாநகர ஆணையாளர்,தியாகி அறக்கொடை இயக்குநர், மாநகரசபை உறுப்பினர்கள்,மாநகர பொறியியலாளர், மாநகர உத்தியோகத்தர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

அங்குரார்ப்பண நிகழ்வின் நினைவாக இந்த செயற்றிட்டத்தை விளக்கும் பதாகை ஒன்றும் திறந்துவைக்கப்பட்டது. அதன் பின்னர் அங்கு மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்திகள் தொடர்பில் காணொலி முறையில் விளக்கமளிக்கப்பட்டது.

# பொலித்தீன் உற்பத்தி பொருள்களை கண்டறிய விசேட சுற்றிவளைப்பு

தடை செய்யப்பட்டுள்ள பொலித்தீன் பொருள்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளை கண்டறியும் விசேட சுற்றிவளைப்புகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் பீ.பி ஹேமந்த ஜயசிங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனவரி மாதம் 21ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித் தலுக்கு அமைய 20 மில்லி மீற்றர் அல்லது 20 கிராமுக்கும் குறைவான நிறையுடைய செசே பைக் கற்றுக்கள் கடந்த மார்ச் மாதம் 31ஆம் திகதியுடன் தடை செய்யப்பட்டுள்ளன.

அவ்வாறான தடை செய்யப்பட்ட பொலித்தீன் உற்பத்திகளில் சில நிறுவனங்கள் ஈடுபட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.






# திகட சக்ர இணைய வழி முகநூல் வலையொளித்தள 49 ஆவது கிணத்தடி நிகழ்வு இன்று சனி மாலை 6.30




திகட சக்ர எனும் இணையவழி முகநூல், வலையொளித்தள அமைப்பு நடாத்தும் 49 ஆவது கிணத்தடி நிகழ்வு வரும் இன்று சனிக்கிழமை இலங்கை நேரம் மாலை 6.30 மணிக்கு நேரலையாக இடம்பெறவுள்ளது.

திகட சக்ரவின் இணைய வழி பட்டி மன்றத்தின் ஊடாக இதுவரை இலங்கை, இந்தியா, ஆஸ்திரேலியா, மலேஷியா, சிங்கப்பூர், பிரித்தானிய போன்ற பல நாடுகளை சேர்ந்த தமிழ் அறிஞர்கள் கலந்துசிறப்பித்துள்ளனர்.

இன்றைய பட்டி மன்றத்தின் நடுவராக பிரபல பேச்சாளார் கலைமாமணி சொல் வேந்தர்சுகிசிவம்கலந்து கொள்கின்றார். ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலானவேறுபாடு குறைந்து வருவது ஆரோக்கியமானது / இல்லை என்ற தலைப்பில் பட்டிமன்றம் இடம்பெறவுள்ளது.

வலம்புரி பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ந.விஜயசுந்தரம், விரிவுரையாளர் ச.கேசவன், சிறுநீரக, சனனித்தொகுதி வைத்திய நிபுணர் ப.பாலகோபி , சட்டத்தரணி இ.எழில்மொழி, சட்டத்தரணி சிவஸ்கந்தஸ்ரீ, சட்டப்பீட மாணவி த.ஆரதி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

நிகழ்வை thigada chakra எனும் facebook, youtube தளங்களின் ஊடாக கண்டு களிக்கலாம்

# கொழும்பு தேசிய வைத்தியசாலைக்குள் நாக பாம்பு; அனைவரும் அச்சமடைவு!

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் விபத்து சிகிச்சை அறைக்குள் திடீரென ஒரு நாகப்பாம்பு வந்ததால் அனைத்து ஊழியர்களும், நோயாளிகளும் அச்சமடைந்துள்ளனர்.

கொழும்பு தேசிய வைத்தியசாலையின் தலைமை தாதி புஷ்பா ரம்யானிடி சொய்சா இதனைத் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து வைத்தியசாலையின் பாதுகாப்பு அதிகாரிகள், எவரையும் தீண்டுவதற்கு முன்னர் நாகப்பாம்பைப் பிடித்தனர். இதன்பின்னர் போத்தல் ஒன்றில் பாதுகாப்பாக வைக்கப்பட்ட அந்த பாம்பு, சுவாசிக்க எளிதாக்க போத்தலில் ஒரு துளை இடப்பட்டது.

இந்த நிலையில் விலங்குகள் சம்பந்தப்பட்ட இடங்களை தொடர்பு கொண்ட போதும் எவரும் வரவில்லை, இறுதியில் நாகத்தை கொழும்பிலிருந்து தூரத்தில் உள்ள ஒரு காட்டில் விடுவதற்கு இணங்கியதாக கொழும்பு தேசிய வைத்தியசாலையின் தலைமை தாதி புஷ்பா ரம்யானிடி சொய்சா தெரிவித்துள்ளார்.

கொழும்பு தேசிய வைத்தியசாலைக்குள் பூனைகள் மற்றும் பல விலங்குகள் இதற்கு முன்னர் வந்தாலும் , ஒரு சிகிச்சை அறைக்குள் நாகப்பாம்பு வந்தது இதுவே முதல் முறை என்று அவர் கூறியுள்ளார்.








வேலைவாய்ப்பு

சமையலுக்கு பெண் உதவியாளர் தேவை.

தொடர்புகளுக்கு - 076 740 3814





இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 23.07.2021 இல் வெளியிடப்பெற்றது.